விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 04 வியாழக்கிழமை (17.05.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 150

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பொன்சேகா விடுதலை குறித்து டிரான்-ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

முன்னாள் படைத்தளபதி சரத் பொன் சேகாவை விடுதலை செய்வது தொடர்பில் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் டிரான் அலஸ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்றுக்காலை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது சிறையில் தற்போது இருக் கின்ற சரத் பொன்சேகா விடுதலை செய்யப் படுவதில் இருக்கின்ற சில பிரச்சினைகள் தொடர்பில் இவ்விருவரும் கலந்துரையாடிய தாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின் றன.

இப்பிரச்சினைகள் தொடர்பில் தீர்வு காணப்பட்டதின் பின்னர் சரத் பொன்சேகாவை விரைவில் விடுதலை செய்ய முடியும் என டிரான் அலஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சரத் பொன்சேகாவை விரைவில் விடு தலை செய்யப்போவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்து (20ஆம் பக்கம் பார்க்க)


## தனித் தமிழீழம் அமைக்க ராஜீவ் காந்தி விரும்பினார்

### கருணாநிதி உரை


(சென்னை)

இலங்கையில் பிரபாகரன் தலைமையில் தனி ஈழம் அமைய இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி விரும்பியதாக தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற புத்தக (20ஆம் பக்கம் பார்க்க)



# தீர்வொன்றை பெறுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பம்!




### அமைச்சர் பீரிஸ் அமெரிக்காவில் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு தேசிய ரீதியிலான தீர்வொன்றை பெறுவதற்கு அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். அமெரிக்கா வுட்றோ வில்சன் சர்வதேச மத்திய நிலையத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்று போதே அவர் இதனைக் கூறினார். (20ஆம் பக்கம் பார்க்க)

## கழுத்தில் இலக்கத் தகடுகளுடன் படம் எடுக்கப்படும் முன்னாள் போராளிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சி யாக மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னாள் விடுதலைப் புலிகளை பதியும் நடவடிக்கை யானது மக்கள் மத்தியில் அச்ச உணர்வை யும் நம்பிக்கையற்ற நிலையையும் உரு வாக்கியுள்ளதாக தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் கட்சியில் இருந்து இடை விலகியோர் பாதுகாப்புத்தரப்பினரால் பதிவு செய்யப்படும் நடவடிக்கை தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ் வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாக திடீர் திடிரென மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கை மக்கள்மத்தியில்பெரும்அச்சத்தையும்பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## புலிச் சந்தேக நபருக்கு தொடர்ந்து விளக்கமறியல்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகா மீது தற்கொலைத் தாக்குதல் நடத்த முற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிச் சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கு மாறு கொழும்புக் கோட்டை நீதவான் உத்தர விட்டுள்ளார்.

2006ஆம் ஆண்டில் சரத் பொன்சேகா மீது தற்கொலைத் தாக்குதல் நடத்த முற்பட்ட தாக சண்முகம் சூரியகுமார் என்பவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 30ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்கு மாறு நீதவான் கனிஷ்க விஜேரட்ண தெரி வித்துள்ளார்.

கடந்த 6 ஆண்டுகளாக தடுத்து வைக்கப் பட்டுள்ள குறித்த சந்தேக நபர், தொடர்பில் பலதடவைகள் (20ஆம் பக்கம் பார்க்க)

# போராளிகள் விடுதலை என்பது அரசின் வெறும் பித்தலாட்டம்

### மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி களுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை பெற்றோர்களிடம் ஒப்படைப்பதாக அரசாங் கம் சர்வதேசத்திற்கு கூறுவது வெறும் பித்தலாட் டம் என்று ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் கூறுகிறார்.

கடந்த ஆண்டில் அலரி மாளிகையில் நடத்தப்பட்ட பெரும் வைபவம் ஒன்றில் இந் திய, அமெரிக்கா, (20ஆம் பக்கம் பார்க்க)



## நிபந்தனைகளின்றி சரத் விடுதலையாவார்

(கொழும்பு)

எதிர்வரும் இரு தினங்களுக்குள் சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுவார் என தான் நம்புவதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து நேற்றுக்காலை ஜனாதி பதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் கலந்துரையாடியதாக டிரான் அலஸ் தெரி வித்தார்.

இன்னும் சிறு சிறு பிரச்சினைகள் தீர்க் கப்பட வேண்டியுள்ளதாகவும் அதனை இன் னும் இரு (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிழக்குத் தேர்தலில் வெற்றியடைந்தால் முதலமைச்சர் பதவி பிள்ளையானுக்கு!

## ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றால் அக்கட்சி சார்பில் 7 ஆசனங்களை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, முதலமைச்சர் பதவியையும் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கே வழங்குவதற்கும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக தெரிய வருவதாவது,

நடைபெற உள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அரசாங்கத்துடன் சேர்ந்தே போட்டியிடவுள்ளது. இதற்காக மாகாண சபையை முன்கூட்டியே கலைப்பதற்கான தனது இணக்கத்தை முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஜனாதிபதியிடம் எழுத்து மூலம் வழங்கியுள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு மே மாதத்திலேயே முடிபடைகிறது. எனினும் அதற்கு முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். அது தொடர்பில் கடந்த வாரம் கிழக்கு முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை அழைத்து அவர் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அப்போது ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்து போட்டியிடுவதற்கான தனது இணக்கத்தை சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்திருந்தார். (எ-11)


ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

மஹோற்சவம் - 2012

17.05.2012 வியாழக்கிழமை



மூன்றாம் நாள் திருவிழா

இரவு 07.00மணி

தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்

www.inuvilinfo.com இணுவில்


## நகுலேஸ்வரத்தில் வியாழ மாற்ற ஹோமம்

(யாழ்ப்பாணம்)

வியாழ மாற்றத்தையொட்டி கீரிமலை நகுலேஸ்வரத்தில் விசேட ஹோமம் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இன்றைய தினம் வியாழ மாற்றத்திற்குரிய பரிகார பூசைகளை செய்ய முடியுமென கீரிமலை நகுலேஸ்வர ஆலய ஆதீன கர்த்தா ராஜராஜஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ந-6)

## மேர்வினுக்காக தேங்காய் உடைப்பு

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவை களனி ஆசனத்தில் இருந்து விரட்டுமாறுகோரி, களனி விகாரையில் நேற்று தேங்காய் உடைத்து பிரார்த்தனை செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் மேர்வின் சில்வாவினால் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டும் லஞ்சம், ஊழல், கப்பம் என்பவற்றை கருத்திற் கொண்டே, களனி பிரதேசத்தில் 500 இற்கும் மேற்பட்ட பெண்கள் ஒன்றுகூடி இவ்வாறு தேங்காய் உடைத்து பிரார்த்தனையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தில் களனி பிரதேச சபை தலைவர், உப தலைவர் உள்ளிட்ட அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு எதிரான பலர் கலந்து கொண்டனர். (எ-11)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



சிவா, விமல், அஞ்சலி, ஓவியா, சந்தானம் மற்றும் பலர் நடிப்பில் சுந்தர் C இன்

கலகலப்பு

மசாலா கபே

இலங்கை இந்திய ஒரே வெளியீடு

10.30, 2.30, 6.30

D.T.S

வைத்திய ஆலோசனை

✓ஆண்மைக்குறைவு ✓வீரியம் அதிகரித்தல்

✓பாலியல் குறைபாடு ✓குழந்தையின்மை

✓ஆண், பெண் உடல் பருமன் குறைத்தல்

✓கருமை நிறம் போக்க ✓உடல் வலு அதிகரித்தல்

இலங்கை - இந்திய தனியார் வைத்தியசாலைக்கு செல்ல ஆலோசனைக்கு அழையுங்கள்.

(C-008)

0750252141

வியாழ மாற்றம் பலாபலன்கள்

17.05.2012இல் வியாழன் மாற்றம். பலாபலன்கள் நூல் வெளிவந்து விற்பனையாகிறது. ரூபா 50/- யாழ் நகர் எங்கும் கிடைக்கும்.

ஆக்கம்:- சோதிடஞானி சன்மாஸ்ரர் (ஆ. சண்முகலிங்கம்)

சி.சி.ரி.எம் பாடசாலை லேன், கொக்குவில் மேற்கு.

(இ)


## விபத்துக்குள்ளானவருக்கு நட்டஈடு கிடைத்தது

(கொழும்பு)

வானினால் இடித்துக் காயப்படுத்தியவர், காயப்பட்டவருக்கு நீதிமன்றின் கட்டளையினால் 75 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்கியுள்ளார்.

இருபாலையினைச் சேர்ந்த வான் சாரதி ஒருவர் கோண்டாவில் வீதியில் கதிர்காமு சிவலிங்கம் என்ற குடும்பஸ்தரை மோதிக் காயப்படுத்தியிருந்தார்.

காயப்பட்டவர் நீதிமன்றின் உதவியை நாடியதனால் சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சாரதிக்கெதிராக கவனயீனமாக வாகனம் செலுத்தியமை, ஏனைய வாகனங்களுக்கு இடையூறாக பயணித்தமை போன்ற குற்றங்களும் கோப்பாய் பொலிஸாரினால் முன் வைக்கப்பட்டமையால் யாழ். நீதிமன்றால் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்து.(எ-4)

# தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து தீர்வை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும்

## கூட்டமைப்புக்கு பிரபா கணேசன் ஆலோசனை

(கொழும்பு)

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதன் மூலமாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முயற்சி எடுக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கத்துடன் இருக்கும் ஏனைய கட்சிகளும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் மூலமாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். இதனையே தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் ஏற்றுக் கொண்டு பாராளுமன்ற தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்க வேண்டும்.

கடந்த 30 வருட காலமாக எமக்கு கிடைத்த பல சந்தர்ப்பங்களை நாம் பற்றி பிடிக்காமல் இழந்துள்ளோம். இம்முறை பாராளுமன்ற தெரிவுக்குழு என்பதே கடைசி சந்தர்ப்பமாகும்.

இரு தரப்பினரும் நிபந்தனைகளற்ற கால எல்லைக்குட்பட்ட வகையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். வெறும் நிபந்தனைகளாலும் தமிழ் வீர வசனங்களினாலும் இழந்ததை மீட்டெடுக்க முடியாது.

பல பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளை திருப்திபடுத்த முடியாது வெளிநாடுகளும் தோல்வியுற்றதை நாம் பார்த்திருக்கிறோம். அவ்வாறான பிடிவாதங்கள் மூலமாக கிடைக்கவிருந்த சமஷ்டி தீர்வினைக்கூட நாம் இழந்துள்ளோம்.

கூட்டமைப்பிலுள்ள தீவிரவாத போக்குகள் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைமைத்துவத்திற்கு நெருக்கடி கொடுப்பதாகவே தெரிகிறது. இவர்கள் பிரச்சினை தீர்ந்து விட்டால் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார்கள்.

வெறும் பதவிகளுக்காக தீர்வினை நோக்கி செல்ல தயங்குகிறார்கள். இதன் பின்விளைவை இவர்கள் அனுபவிக்க நேரிடும். எதிர்கால சந்ததியினர் கல்வித் திறனுடன் வாழ்வதற்கான ஏற்பாடுகளை இன்றைய தலைவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதையே இன்று தமிழ் மக்கள் எதிர்பார்த்து நிற் கின்றார்கள்.

எனவே வெகுவிரையில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பெறகூடிய தீர்வினைப் பெற்று கல்வித் துறையை வளர்த்து எமது சமூகத்தை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டிய கடமை தமக்கு உண்டு என்பதை வடகிழக்கு அரசியல் தலைவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் என்றார்.(எ-11)

# ஆசிரியர்களுக்கு மட்டு.வில் பதிவு ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

ஆங்கில பாடநெறிக்கான பதிவுகள் மற்றும் விரிவுரைகள் பலாலி ஆசிரியர் கலாசாலையிலேயே மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடிதம் மூலம் அனுப்பியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஸ்ராலின் தெரிவித்தார்.

பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆங்கிலப் பயிற்சியினை தொடரச் சென்ற மாணவர்களினை கல்வியமைச்சு மட்டக்களப்பில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கூறியது.

இச் செயலானது அனைத்து சட்ட திட்டங்களுக்கும் முரணானது. இங்கே அனைத்து வளங்களும் இருக்கும்போது மாணவர்களினை இங்கிருந்து அங்கு சென்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு வற்புறுத்துவதனை இலங்கை ஆசிரியர் சங்கம் ஏற்றுக் கொள்ளாது.

இப்பிரச்சினை தொடர்பாக நாம் கல்வியமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தி உள்ளோம்.

இக்கடிதத்திற்கு உரிய பதில் கிடைக்காவிடின் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

முக்கியமாக இங்கு மாணவர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் அனைத்து வளங்களும் காணப்படுகின்ற போதும் இப்பிரதேச மாணவர்களினை மட்டக்களப்பில் பதிவு செய்யுமாறு வற்புறுத்துவதினை இலங்கை ஆசிரியர் சங்கம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-4)

# இடைக்கால தடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டது!

பதவி காலம் நிறைவடைவதற்கு முன்னரே வட மத்திய மாகாண சபையை கலைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைக்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவு யூன் 6 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தற்போது விதிக்கப்பட்டுள்ள இடைக்கால தடை உத்தரவை நிரந்தர உத்தரவாக பிறப்பிப்பதா அல்லது உத்தரவை ரத்து செய்வதா என்பது குறித்து யூன் 6 ஆம் திகதி அறிவிக்கப்படும் என வட மத்திய மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன தெரிவித்தார்.

பதவிக் காலம் நிறைவடைவதற்கு முன்னரே வட மத்திய மாகாண சபையை கலைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை கைவிடுமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சியின் வட மத்திய மாகாண சபை உறுப்பினர் அனில் ரத்நாயக்க தாக்கல் செய்த மனு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்விடயத்தில் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்க வட மத்திய மாகாண சிவில் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றுக்கு அதிகாரம் இல்லை என மனுவின் பிரதிவாதியான வடமத்திய மாகாண சபை முதலமைச்சர் பேர்டி பிரேமலால் திஸாநாயக்க சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி வாதிட்டார்.

வழக்குதாரர் தவறான தகவல்களை சமர்ப்பித்து வழக்குத் தாக்கல் செய்துள்ளதால் அதனை நிராகரிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

2009 யூன் 10 ஆம் திகதி இறுதித் தேர்தல் இடம்பெற்ற வட மத்திய மாகாண சபையின் பதவிக்காலம் 2013 ஓகஸ்ட் 17 ஆம் திகதி நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)


விற்பனையாளர் தேவை

எமது ஜவுளி நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஆண் விற்பனையாளர் தேவை.

தொடர்பு:-

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்

41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(8467)

வடக்கு மாகாண அலுவலக பணியாளர், நூலகப் பணியாளர் போட்டிப் பரீட்சைகளுக்கான விசேட கருத்தரங்கு

இன்று வியாழன் காலை 10மணி – 5 மணி வரை

பொது அறிவு, பொதுஉளச்சார்பு விடயங்கள்

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்

(C-019)

YAALH ENGLISH ACADEMY

ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்

விபரங்கள் + பெயர் பதிவு : 077 3212 711 மூலம்

புதிய வகுப்புகள் ஆரம்பம்

FOUNDATION LEVEL

23.05.2012 : புதன் : பிற்பகல் 3.30 மணிக்கு

INTERMEDIATE LEVEL

26.05.2012 : சனி : பிற்பகல் 3.00 மணிக்கு

♦ முழுக்கட்டணம் : 1500 ரூபாய் (மூன்று மாதப்பயிற்சி)

♦ இலவசம் : முதலிரு வகுப்புகள்

வகுப்பிட அனுசரணை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்

(8460)

# இன்று ஒரு தகவல்

## புல்லுக்கட்டும் காளை மாடும்!

ஒரு ஆசிரமத்தில் குரு நிறைய சீடர்களுடன் அமர்ந்திருந்தார்.

அவர் சிறிய சிறிய கதைகளை சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு சீடனுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

"நாம் இவர்களிடம் பெரிய தத்துவங்களை எதிர்பார்த்து வந்தோம். வாழ்க்கையின் உண்மைகளைப் புரிந்துகொள்ள வேண்டுமென்பது நமது நோக்கம்.

ஆனால், இவர் ஏதோ கதை சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று நினைத்தான்.

இவர் மாதிரியே இன்னும் பல சீடர்களும் நினைத்தார்கள்.

ஆனால், எதுவும் வெளியில் சொல்லவில்லை. பேசாமல் அமர்ந்திருந்தார்.

இதை குரு புரிந்து கொண்டார். வகுப்பு நடத்திக் கொண்டிருந்த அவர் திடீரென்று யன்னல் வழியாக வெளியே பார்த்தார்.

"சரி... எல்லோரும் எழுந்து வாருங்கள் வெளியே போகலாம். அங்கே என்னமோ நடக்கிறது. அது என்னவென்று பார்க்கலாம்... வாருங்கள்"

எல்லோரும் வெளியே வந்தார்கள்.

அங்கே ஒரு ஆள்... ஒரு காளை மாட்டைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தான். அவன் முன்னால் இழுக்கிறான். காளை மாடு பின்னால் இழுக்கிறது.

ஆனால், காளை மாட்டுக்கு அவனை விட வலு அதிகமாக இருந்தது. அதனது விளைவு என்னவென்றால், அவன் இரண்டு அடி முன்னாலே இழுத்தான் என்றால் காளை மாடு நான்கு அடி பின்னால் இழுக்கிறது.

தொடர்ந்து அந்த இழுபறி நடந்து கொண்டிருக்கிறது.

"உங்களுக்கும் எனக்கும் இடையில் உள்ள நிலைமை இது தான் என்று சொல்கிறேன். ஆனால், அந்த மனிதனுக்கும் எனக்கும் வித்தியாசம் உண்டு. அவன் செய்வது முட்டாள்தனம்"

இப்படி கூறிக் கொண்டே அவனிடம் போனார்.

"ஐயா... நீ ஊருக்குப் புதியவனா?"

"ஆமாம். நான் ஊருக்குப் புதியவன். ஆனால், இந்த வேலைக்கும் புதியவன். அதனால்தான் நீண்ட நேரமாக இப்படியாக இழுபறி.

"காளைக்கு என்று ஒரு மொழி உண்டு... அது உனக்கு விளங்கவில்லை... அதுதான் பிரச்சினை!"

"என்ன ஐயா சொல்கிறீர்கள்?"

"சற்று பொறு. இப்போது பார்..." என்று சொல்லிக் கொண்டே அந்த குரு பக்கத்தில் இருந்த பசுமையான புல்கட்டு ஒன்றை கையில் எடுத்துக்கொண்டார். மாட்டிற்கு முன்னால் போனார். அதன் முகத்திற்கு எதிரே நீட்டினார்... உடனே அது அவர் பின்னால் தனது பயணத்தை ஆரம்பித்தது.

அவனுக்கு ஆச்சரியம்.

"அடடா, இது என்ன? கயிறு கூடத் தேவையில்லை போலுள்ளது"

குரு, தன் கையில் இருந்த புல்லுக்கட்டை அவன் கையில் கொடுத்தார்... "நீ போ... இது உன் பின்னால் வரும்" என்றார்.

அவனும் போனான். மாடு அவன் பின்னால் நகர்ந்தது.

அதன்பின் அவர் தன் சீடர்கள் பக்கம் திரும்பினார்.

"சீடர்களே! இதைத்தான் நான் உங்கள் விடயத்திலும் செய்ய வேண்டியிருக்கிறது" என்றார்.

சீடர்கள் வியப்புடன் அவர் முகத்தைப் பார்த்தார்கள்.

உடனே குரு சொன்னார்; "இப்போது உங்களை ஒரு மலை உச்சிக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. கயிறு கட்டி இழுத்துச் செல்வது கடினம் அதுதான் கதை சொல்லி அழைத்துச் செல்கிறேன். நான் உங்களுக்குச் சொல்கிற கதைகள் அந்தக் காளை மாட்டுக்கு முன்னால் இருக்கிற புல்கட்டு மாதிரி.

எனது வேலை உண்மையை நோக்கி உங்களை அழைத்துச் செல்வதுதான்.

அங்கே போய் உண்மையை கண்டுகொள்வது உங்கள் வேலை. உண்மை உச்சியில் இருக்கிறது.

ஆகவே, நான் சொல்கிற கதைகளில் உண்மை இருக்கிறதா என்று ஆராயாதீர்கள். இது ஒரு ஏமாற்று வேலை.

காளை மாட்டுக்குப் புல்லைக் காட்டுகிற மாதிரி. அந்தப் புல்கட்டு அதை அழைத்துச் செல்கிறது. அதற்கு வேண்டிய ஆகாரம் அங்கே கொட்டகையில் காத்திருக்கிறது.

சான்றோர்கள் நமக்கு நிறைய நீதிக் கதைகளை சொல்லியிருக்கிறார்கள். அவற்றைப் படிக்கும்போது; "ஒன்றும் நம்புகிற மாதிரி இல்லையே" என்று நமக்குத் தோன்றும்.

அவையெல்லாம் புல்கட்டுகள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் யாழில் ஆத்மசாந்தி பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இனப்பிரச்சினையினாலும் இனக்கலவரங்களினாலும் போர்க் காரணங்களினாலும் நம் தமிழ் உடன் பிறப்புக்கள், இலட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் காணாமல் போயுமுள்ளனர். அதனால் அவர்களின் உறவுகளும் நாமும் ஆறாத்துயரில் மூழ்கியுள்ளோம்.

கடந்த 2009 மே திங்களில் ஏற்பட்ட இனப் பேரழிவில் கொல்லப்பட்டோர், காணாமல்போனோர் நினைவாகவும் கடந்த காலங்களில் உயிர் நீத்தவர்களுக்காகவும் மே 18 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் ஈடுபடுவது ஆறுதல் தரும் நிகழ்வாகும்.

எனவே, எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம், இல.30, மாட்டின் வீதியில் அமைந்துள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையக வளாகத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தீபமேற்றல் நிகழ்ச்சியிலும் உயிர்நீத்த எம் உறவுகளின் குடும்ப உறுப்பினர்களையும் மற்றும் அனுதாபிகளையும் கலந்து ஆன்ம ஈடேற்றத்துக்காகப் பிரார்த்திக்குமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா அறிவித்துள்ளார். (அ)

# தேசிய கணித ஒலிம்பியாட் தெரிவுப்பரீட்சை

மாகாண கல்வித்திணைக்களத்தினால் தேசிய கணித ஒலிம்பியாட் இவ்வாண்டுக்கான தெரிவுப்பரீட்சை நாளை மறுதினம் சனிக்கிழமை இசுறுபாயவிலுள்ள கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதில் தரம் 6,7 (பிரிவு-I) மாணவர்களுக்கான தெரிவுப் பரீட்சை காலை 9 மணி முதல் 11 மணிவரையும் தரம் 8,9 (பிரிவு-II) மாணவர்களுக்கான தெரிவுப் பரீட்சை முற்பகல் 11 மணி முதல் 12.30 மணிவரையும் தரம் 10,11 (பிரிவு-III) மாணவர்களுக்கான தெரிவுப் பரீட்சை பிற்பகல் 1.15 மணி முதல் பிற்பகல் 2.45 மணி வரையும் நடத்தப்படவுள்ளது. இப்பரீட்சைக்கு வடமாகாண பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

**பிரிவு I**

ஆர்.யதுர்சன் (யா/யாழ்.இந்துக்கல்லூரி), ஆர்.ஆதிரையன் (யா/யாழ்.இந்துக்கல்லூரி),ஐ.சிந்துஜன் (யா/யாழ். இந்துக் கல்லூரி),எஸ்.யதுர்சன் (யா/ஹாட்லிக் கல்லூரி), கே.மாலன்பன் (யா/ஹாட்லிக் கல்லூரி), ஜெ.ஜெயதீபிகா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), எஸ்.சர்மிகா (வ/இறம்பைக்குளம் மகளிர் ம.வி.)

**பிரிவு II**

என்.டிலக்சேஸ்வரன் (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), ரி.அபிசேகா (யா/நெல்லியடி ம.ம.வி.), எல்.ஸ்ரீகர்சன் (யா/யாழ்ப்பாணக்கல்லூரி), எஸ்.காருண்யன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), ஜே.ஜெயதாரணி (யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)

**பிரிவு III**

எஸ்.வித்தியா (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கே.மகிந்தன் (யா/ஹாட்லிக் கல்லூரி) (அ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 80-120 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 60 |
| தக்காளி | 160 | 70 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 40 | 40 | 50 |
| கரட் | 60 | 50 | 70 |
| பூசணி | 20 | 30 | 30 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 20 | 20 | 40 |
| சின்ன வெங்காயம் | 60-100 | 90 | 50-70 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 70 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 70 | 70 | 70 |
| பயற்றங்காய் | 60 | 60 | 40 |
| லீக்ஸ் | 120 | 70 | 160 |
| பீற்றூட் | 60 | -- | 80 |
| கறிமிளகாய் | 100 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 180 | 250 | 200 |
| போஞ்சி | 140 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 100 | -- | -- |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 18-25 | 15-18 |

# இராசி பலன்

17.05.2012
(வைகாசி 04, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
துவாதசி முன்னிரவு 12.00 மணிவரை
ரேவதி பின்னிரவு 5.31 மணிவரை
இராகுகாலம் 1.23-2.53 மணிவரை
சுபநேரம் 7.23-8.53 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்** உணர்ச்சிவசப்படும் நிலை ஏற்படலாம், பொழுதுபோக்கு விடயங்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், காரிய அலைச்சல்களால் மன உளைச்சல்கள் ஏற்படலாம்.

**இடபம்** காலை நேரத்திலேயே காதினிக்கும் செய்திகள் வந்து சேரலாம், உற்றார், உறவினர்களின் வருகையுண்டு, கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும், வளர்ச்சிப் பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள்,புதிய திட்டங்கள் கைகூடும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்,மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்,அந்நியர் உதவியுண்டு.

**கடகம்** மறதியால் விட்டுப்போன பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தொழிலில் அதிக பிரயாசை எடுப்பீர்கள்,நல்லவர்களின் தொடர்புகளால் அனுகூலமுண்டு.

**சிங்கம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, நட்பொன்று பகையாகலாம், புதிய திருப்பங்கள் ஏற்படும் நாள்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை அமையலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலமான பயணங்கள் இடம்பெறலாம், செய்தொழில் முன்னேற்றகரமாக அமையும்.

**துலாம்** விருந்தினர்களின் வருகையுண்டு, எதிர்பார்த்தபடியே வரவுகள் வந்து சேரும், அயலவருடன் ஏற்பட்ட பகை மாறும், உடல் நலம் சீராகும், நன்மைகள் நடைபெறும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்,தொலைபேசி வழியில் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு,சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**தனுசு** தாராளமாகச் செலவுகள் செய்து மகிழும் நாள், நாணயமும் நேர்மையும் கொண்ட நண்பர்களால் நன்மையுண்டு, அரசியல் செல்வாக்கு மேலோங்கும், பெற்றோர் மீது பிரியம் கூடும்.

**மகரம்** பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள்,கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள்,இளைய சகோதரத்தின் வழியில் இனிய செய்தியொன்று வந்து சேரலாம்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்,பொருளாதார நிலை உயர்வடையும், பயணங்களால் பலன் கிடைக்கும்,ஆரோக்கியம் சீராகும்.

**மீனம்** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும் நாள்,திட்டமிட்ட காரியமொன்றில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம்,ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும்,பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

வளவன்

# தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசுக்கு அக்கறை

## ஐ.தே.க. பிரதமகொறடா அமரதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

**தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான உண்மையான அக்கறை அரசாங்கத்திற்கு இருப்பதாக எதிர்க்கட்சி பிரதம கொறடாவும் ஐ.தே.க சிரேஷ்ட எம்.பியுமான ஜோன் அமரதுங்க கூறியுள்ளார்.**

ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடங்கலான ஐ.தே.க தூதுக்குழு நேற்று முன்தினம் ஜனாதிபதியை சந்தித்தது. இந்த சந்திப்பில் ஜோன் அமரதுங்கவும் கலந்து கொண்டார்.

இந்த சந்திப்பு குறித்து பிபிசி செய்தி சேவைக்கு கருத்து தெரிவித்த ஜோன் அமரதுங்க, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கத்திற்கு உண்மையான தேவை உள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பை பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு அழைத்து வர ஐ.தே.க ஒத்துழைக்க வேண்டும் என இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி கோரியுள்ளார்.

இரு பிரதான கட்சிகளும் இணைந்து ஏனைய கட்சிகளை தெரிவுக் குழுவுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும் ஏனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

தாம் முன்வைக்கும் விடயங்களை அரசாங்கம் ஏற்கும். ஆனால் த.தே. கூட்டமைப்பை தெரிவுக்குழுவுக்கு அழைத்துவர வாய்ப்பாக அமையும் என ஐ.தே.க சுட்டிக்காட்டியது.

த.தே.கூட்டமைப்பு இல்லாத தெரிவு க்குழு அங்கம் வகிப்பது பயன் அற்றது எனவும் ஜோன் அமரதுங்க கூறினார்.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த ஐ.தே.க செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இனப் பிரச்சினை க்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சிறந்த சூழலை ஏற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் பிரத்தியேக தன்மையை பாது காக்கும் வகையில் அரசியல் தீர்வு இடம்பெறவேண்டும் என்பது ஐ.தே.கவினதும் நிலைப்பாடு எனவும் அவர் கூறினார்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு பொதுவான நிகழ்ச்சி நிரல் அமைக்கப்பட வேண்டும் எனவும் அதில் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் திஸ்ஸ அத்த நாயக்க கூறினார். (அ)

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது குறுக்கே மாடு சென்றதில் மோட்டார் சைக்கிள் தடம் புரண்டு படுகாயமடைந்ததால் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் பரந்தன் ஓராங்கட்டையில் இடம்பெற்றுள்ளது.

இதில் முரசுமோட்டையை சேர்ந்த ச. தயாகரன் (வயது 40) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

குறித்த நபர் கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-9)

# இந்தியப் பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவருக்கு பட்டப்படிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் ஆயுர்வேத யூனானி சித்த வைத்தியம் மற்றும் ஹோமியோபதி வைத்தியத்துறைகளில் பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மற்றும் கலாநிதி பட்டப்படிப்புக்களை புலமைப்பரிசில் அடிப்படையில் பெறுவதற்கு இலங்கை மாணவ, மாணவியரிடம் இருந்து விண்ணப்பங்கள் கேரப்பட்டுள்ளன.

2012-2013 ஆம் ஆண்டிற்கு இந்த மாணவர்கள் சேர்த்து கொள்ளப்படுவார்கள். இந்திய அரசாங்கம் இவ்விதம் 10 புலமைப் பரிசில்களை மாத்திரம் வழங்க உள்ளது. திறமை, கல்வித்தகைமை அடிப்படையிலேயே செய்யப்படவுள்ளது.

இந்த மாணவர்களை தெரிவு செய்யும் பணியை இந்திய அரசாங்க அதிகாரிகள் இலங்கையின் உயர்கல்வி அமைச்சுடன் கலந்துரையாடியே மேற்கொள்வர்.

இந்தப் புலமைப்பரிசிலுக்கு தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருடைய கல்விச் செலவை முழுமையாகவும் இவர்கள் இந்தியாவில் கல்வி பயிலும் போது உணவு மற்றும் ஏனைய செலவுகளுக்கு மாதாந்தம் ஒரு குறிப்பிட்ட தொகையையும் இந்திய அரசாங்கம் வழங்கும்.

இந்தப் புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு தங்குமிட வசதிக்கான விசேட கொடுப்பனவு, புத்தகங்கள், காகிதாதிகளை வாங்குவதற்கென வருடாந்தம் ஒரு தொகை பணம் அன்பளிப்பாகவும் கொடுக்கப்படும். இலவச வைத்தியவசதிகளும் இந்தியாவில் செய்து கொடுக்கப்படும்.

புலமைப்பரிசில்களின் அடிப்படையில் இந்தியாவில் கல்வி பயில விரும்பும் மாணவ மாணவியர் தாங்கள் பற்றிய முழு விபரங்களையும் உயர்கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து கற்கைநெறி தொடர்பான ஏனைய ஆவணங்களையும் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை இலக்கம் 18, வோட்ஸ் பிளேஸ், கொழும்பு 7 எனும் உயர் கல்வி அமைச்சின் தலைமைக் காரியாலயத்திற்கு 2012 மே மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி அரியமலர் முருகேசம்பிள்ளை



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அரியமலர் முருகேசம்பிள்ளை அவர்கள் மே மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஓய்வுபெற்ற யாழ். மேலதிக உதவி அரசாங்க அதிபர் முருகேசம்பிள்ளை அவர்களின் அருமை மனைவியுமாவார்.

Dr.யோகலட்சுமி(கொழும்பு), டொராண்ரோவில் வசிக்கும் தனலட்சுமி,தியாகலட்சுமி,வரலட்சுமி, .தைரியலட்சுமி, Australia இல் வசிக்கும் Dr. தர்மலட்சுமி, ஜெயலட்சுமி, Dr.மகாலட்சுமி(California ,USA)ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்றவர்களான குமார் பொன்னம்பலம், Dr.பாலகிருஷ்ணன், Mississauga வில் வசிக்கும் கமலாநந்தன், ரஞ்சித் சண்முகரத்தினம், Australia இல் வசிக்கும் Dr.சோமசுந்தரம் (Canbarra), ஸ்ரீஸ்காந்தன் (Sydney), Dr.மனோகரன் (USA)ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற ஜெபரத்னராஜாவின் அருமைச் சகோதரியும், Dr. மிருநாளினி, கஜேந்திரகுமார், காலஞ்சென்ற பிரியா மற்றும் திவ்யா, மயூரன், Dr.கணன், Dr. பிரவீன், தீபனா, ஹரன், மேனகா, தானியா, சத்தியா, பிரசாந்தி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சிவான், தானிஸா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மே மாதம் 16 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிமுதல் 9 மணிவரை இல. 2180 Hurontario Rd, Mississauga இல் அமைந்துள்ள Turner & porter Funeral Directors இல் பார்வைக்காக வைக்கப்பட்டு மறுநாள் வியாழக்கிழமை (17.05.2012) காலை 9 மணிக்கு அதே இடத்தில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு:-
905 276 9299

(சி-017)

தகவல் :-
குடும்பத்தினர்.

# இலங்கையர்களுக்கான இழப்பீட்டுத்தொகை அதிகரிப்பு

தமிழகத்திலுள்ள இடைத்தங்கல்முகாம்களில் வாழும் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் நலன்புரி வசதிகளை மேலும் உயர்த்துவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய இயற்கையாக உயிரிழக்கும் நபர்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டை 15 ஆயிரம் முதல் 25 ஆயிரம் இந்திய ரூபா வரை அதிகரித்துள்ளதாக தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதமொன்றின் பின்னர் தமிழக அரசு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்திய இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு 1987 ஆம் ஆண்டின் பின்னர் பிறந்த குழந்தைகளுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட வேண்டுமென மாக்சிசவாதியான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் எ. சௌந்தராஜன் குறிப்பிட்டதாக தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது. (அ-2)

## அதிபர்களுக்கான கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

யாழ்.வலயப் பாடசாலை அதிபர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறியத்தந்துள்ளார். (அ)

## கொத்தியாலடி இந்துமயான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்

## 20.05.2012

கொத்தியாலடி இந்துமயான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் புதிய நிர்வாகசபைத் தெரிவும் நடைபெறவுள்ளதால் தயவு செய்து இவ்மயான கலந்துரையாடலில் தவறாது சமுகமளிக்குமாறு பொதுமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

★ இடம்:-வலி.தெற்கு பிரதேசசபை கூட்டமண்டபம்

◆ காலம்:-20.05.2012 ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 3.00 மணிக்கு

வலி.தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
08.05.2012

(சி-016)

தி.பிரகாஷ்
தவிசாளர்
வலி.தெற்கு
பிரதேசசபை, சுன்னாகம்.

# கலந்துரையாடல்

(பூந்தோட்டம்)

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிள்ளை நேய பாடசாலைகளின் முன்னேற்ற செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள் ளது.

இக்கலந்துரையாடலில்பிள்ளைநேய பாடசாலைகளின் அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(அ-3-266)

# தமிழர் பகுதி அரச அதிபர்களின் இடமாற்றம் நல்லிணக்கத்தில் பின்னடைவை ஏற்படுத்தும்

## சுமந்திரன் எம்.பி.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதில் பெரும்பங்கு வகித்த பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்குப் புகழாரம் சூட்டும் வகையில் வெளியிடப்பட்ட கோத்தாவின் போர்: இலங்கையில் தமிழ்ப் புலிப் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுதல் (Gota's War: The Crushing of Tamil Tiger Terrorism in Sri Lanka) என்ற நூல் சர்ச்சைகளை கிளம்பியுள்ளன.**

திவயின என்ற சிங்கள நாளிதழின் ஊடகவியலாளரான சி.ஏ.சந்திரபிறேம எழுதியுள்ள கோத்தாவின் போர் என்ற இந்நூல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நூல் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நாடாளுமன்றில் பல்வேறு வினாக்களை எழுப்பியுள்ளார்.

யாருடைய போர்? இது கோத்தாவின் போர் எனக் கூறுகின்றது. இந்த நூலின் உப தலைப்பு ஒன்று இலங்கையில் தமிழ்ப் புலிப் பயங்கரவாதத்தை ஒழித்தல் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் புலிகளுக்கு சமமாகவும் பயங்கரவாதிகளுக்கு சமமாகவும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான எண்ணங்கள் நாட்டில் நல்லிணக்கப்பாட்டை உருவாக்க ஒருபோதும் உதவாது.

இவ்வாறான மனப்பாங்கு நாட்டில் அமைதியை ஒருபோதும் தோற்றுவிக்காது என சுமந்திரன் நாடாளுமன்றில் தனது வாதத்தை முன்வைத்துள்ளார்.

அத்துடன் அண்மையில் மாவட்ட அரசாங்க அதிபர்கள் இடமாற்றம் செய்யப்பட்டதானது நாட்டில் மீளிணக்கப்பாடு உருவாவதில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்ப் பிரதேசத்தில் இருந்த அரசாங்க அதிபர்கள் மாற்றப்பட்டு அங்கு தமிழ் மொழித் தேர்ச்சி இல்லாத அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதானது நாட்டில் மேற்கொள்ளப்படும் மீளிணக்கப்பாட்டு நகர்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தாது.

கடந்த வியாழனன்று வவுனியா அரசாங்க அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டார். அதேபோன்று மன்னார் அரசாங்க அதிபரும் இடமாற்றம் செய்யப்பட்டார். இதனை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்.

தமிழ்மொழித் தேர்ச்சி இல்லாத ஒருவர் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதை நாம் மீண்டும் மீண்டும் எதிர்த்து நிற்கின்றோம். அத்துடன் இவர் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியாவார்.

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை ஆளுநர்களாகக் கொண்ட இரு மாகாணங்கள் என்றால் அவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மட்டுமே.

ஏன் இவ்வாறு நடக்கிறது? யுத்தம் முடிபடைந்து மூன்று ஆண்டுகள் முடிபடைந்தும் கூட தற்போதும் நல்லிணக்கப்பாடு தொடர்பாக வெறும் வாயளவில் மட்டுமே பேசப்படுகின்றது. இது தொடர்பாக ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

நீங்கள் வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் மீது கட்டுப்பாடுகளைத் திணித்து மக்களின் சொந்த நிலங்களை அபகரிக்க விரும்புகிறீர்கள் என்றும் சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

(அ-2)



தனது பதவிக்காலம் முடிவடைந்து சீனாவுக்கு செல்லவுள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் யங் ஸியுபிங் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் நேற்று சந்தித்து கைலாகு கொடுப்பதைப் படத்தில் காணலாம்.

# தேசிய கைத்தொழில் தகைமை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவினால் நடத்தப்பட்ட குளிரூட்டி திருத்துதல், ஒட்டுவேலை ஆகிய தொழிற்பயிற்சி கற்ற மாணவர்களுக்கான தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எஸ். அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் பிரதிக்கள பணிப்பாளர் எம்.ஜே.துவான்மன்சில் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண முறைசார கல்வி பிரிவின் முன்னாள் உதவிக் கல்வி பணிப்பாளர் க.நடராஜா, வவுனியா தெற்கு வலய முறைசாரா கல்விப் பிரிவின் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் செ.ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(அ-3-266)

# விழிப்புணர்வு செயலமர்வு

(பூந்தோட்டம்)

வவுனியாவில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடுகளை வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் கட்டுப்படுத்தும் நோக்குடன் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகம் கல்வி அமைச்சுடனும் கனேடிய செஞ்சிலுவை சங்கத்துடனும் இணைந்து முன்னெடுக்கும் சிறுவர்களுக்கான *பாதுகாப்பாக இருப்போம்* என்னும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்ட செயலமர்வு இன்றும் நாளையும் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறும் இச்செயலமர்வில் கருத்துரைகளை கனேடிய செஞ்சிலுவை சங்கத்தின் சிரேஷ்ட பயிற்றுநர் திருமதி தனலக்சுமி றொபின்சன், ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் வீ.பரஞ்சோதி, வடமாகாண உள சமூக வளநிலைய உதவி முகாமையாளர் ச.ஆனந்தநடராஜன், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆ.சுபாஸ்கரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

********

வவுனியா தெற்கு வலய பாடசாலைகளில் உட்படுத்தல் கல்விப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கான கல்வி உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பான விழிப்பணர்வு செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை முறைசாரா கல்விப்பிரிவு மண்டபத்தில் விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் வெ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இவ்விழிப்பணர்வு கருத்தரங்கில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்,செட்டிகுளம் மகா வித்தியாலயம், வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலயம், மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை, தாலிக்குளம் அ.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளில் உட்படுத்தல் கல்வி பிரிவில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்களுக்கே இவ்விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

(அ-3-266)

# ஈழப்போர் தொடர்பாக இந்தியாவின் நிலையை மாற்றியமைத்தவர் பசில்

(கொழும்பு)

நான்காம் ஈழப் போர் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் தற்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மாற்றத்தை ஏற்படுத்தினார் என இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையிலும் இந்தியா யுத்தத்திற்கு ஆதரவாக செயற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.


கடந்த 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பசில் ராஜபக்ஷ இந்தியாவிற்கு மேற்கொண்ட விஜயத்தைத் தொடர்ந்து பயங்கரவாதம் இராணுவ ரீதியாக இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு இந்தியா மாறியிருந்தது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


கோத்தாவின் போர் என்ற நூல் தொடர்பில் இந்தியாவின் முன்னணி ஊடகமொன்று வெளியிட்டுள்ள கட்டுரையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் இறுதியில் இரு நாடுகளும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவின் மாற்றம் தெட்டத்தெளிவாக வெளிப்பட்டிருந்தது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு மனிதாபிமான நிலைமைகள் குறித்து கவனிக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய அதேவேளை பயங்கரவாதம் இராணுவ ரீதியாக இல்லாதொழிக்கப்பட வேண்டுமென இந்தியா வலியுறுத்தி வந்தது.

முக்கியமாக இராணுவ ரீதியான நடவடிக்கைகளின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என மிக நீண்டகாலமாக வலியுறுத்தி வந்த இந்தியா அந்தக் கொள்கையினை கைவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)





யாழ்.அரச அதிபராக சுந்தரம் அருமைநாயகம் நேற்று பதவியேற்றுக்கொண்டார். யாழ்.மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்த இவருக்கு அங்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அரச அதிபராக தனது பதவியை சுந்தரம் அருமைநாயகம் பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# எனது பதவிக்காலத்தில் எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளத்தயார்

## யாழின் புதிய அரசஅதிபர் சுந்தரம் அருமைநாயகம்

(யாழ்ப்பாணம்)

**இந்த நாட்டிலுள்ள ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்த மாவட்டம் யாழ். மாவட்டம். இங்கு என்ன நடந்தாலும் அது உலக நாடுகளில் பேசப்படும். அத்தகைய மாவட்டத்தில் சேவை செய்ய கிடைத்த சந்தர்ப்பத்தை என் வாழ்நாளில் பெரும் பேறாக கருதுகின்றேன் என யாழ். அரச அதிபராக நேற்று பதவியேற்ற சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.**

யாழ். அரச அதிபராக இருந்த திருமதி இமெல்டா சுகுமார் ஜனாதிபதி செயலகத்திற்கு பதவி உயர்வுடன் இடமாற்றம் பெற்றுச் சென்றதையடுத்து மட்டக்களப்பு அரச அதிபராகியிருந்த சுந்தரம் அருமைநாயகம் யாழ். அரச அதிபராக நியமிக்கப்பட்டார்.

இதன்பிரகாரம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் தனது பதவியை பொறுப்யேற்றுக்கொண்டதோடு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டார். அங்கு கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டம் எனக்கு நன்கு பரீச்சயமான மாவட்டம். இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப்பணிகளை துரிதப்படுத்த முயற்சிப்பேன்.

அரச அதிபராக நான் பொறுப்பேற்றுக் கொண்டாலும் பிரதேச செயலர்கள் மற்றும் ஏனைய அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பு இருந்தால் தான் நிர்வாகத்தை சரிவர நடத்த முடியும். அத்தோடு மக்களின் தேவைகளையும் விரைவாக நிறைவேற்ற முடியும்.

இலங்கை நிர்வாக சேவையில் கடந்த 23 வருடங்களாக பணிபுரிந்து வருகின்றேன். பதுளை, மட்டக்களப்பு , திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களில் உதவித் தேர்தல் ஆணையாளராகவும் பணிபுரிந்துள்ளேன். அத்தோடு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலராகவும் பணிபுரிந்ததோடு 2006 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டேன்.

பின்பு யாழ். அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளேன். அதற்காக கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இந்த மாவட்டத்தில் அரச அதிபராக பணிபுரிவது பெரும் சவாலாக இருக்கும். இருப்பினும் அந்தச் சவால்களை எதிர்கொள்ள நான் தயாராகவே வந்துள்ளேன்.

அத்தோடு இந்த மாவட்டம் எனக்கொன்றும் புதியதல்ல. உயர்தரம் படிக்கும்போது இந்த மாவட்டத்தில் பிரத்தியேக வகுப்பிற்காக வந்து சென்றுள்ளேன். அத்தோடு யாழ். பல்கலைக்கழகத்தில் தான் எனது பட்டப் படிப்பை மேற்கொண்டேன்.

மட்டக்களப்பில் அரச அதிபராக பதவியேற்ற போதும் மக்கள் இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். அத்தகைய சூழலில் தான் நான் பதவியேற்றேன். தற்போதும் சவால்களை சந்திக்க தயாராகவே வந்துள்ளேன் என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ-6)

### ஹாட்லிக் கல்லூரிக்கு மாணவர் விடுதி

(கரவெட்டி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு நான்கரைக்கோடி ரூபாய் செலவில் புதிய மாணவர் விடுதி அமைக்கப்பட்டு வருகிறது.

குறித்த பாடசாலையில் 100 வருட பழைமை வாய்ந்த மாணவர் விடுதி இருந்த இடத்தை அகற்றிவிட்டு தற்பொழுது புதிய மாணவர் விடுதி நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதற்குக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நிதியுதவியை வழங்கியுள்ளது. (அ-3-24)

### பருத்தியோலை வீதி திறந்து வைப்பு

சுன்னாகம் பகுதி பருத்தியோலை வீதி வலி.தெற்கு பிரதேச சபையினால் புதிதாகச் செப்பனிடப்பட்டு, தார் ஊற்றப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வலி. வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலி.தெற்கு பிரதேசசபையின் தவிசாளர் தி.பிரகாஷ், சிறப்பு விருந்தினர்களாக கிராம உத்தியோகத்தர் செல்வி சசிகலா, வலி. தெற்கு பிரதேச சபை உறுப்பினர்களான லயன் ரி.தேவராஜன், வில்லியம் ஜேசுதாசன், கருணைநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது பருத்தியோலை வாழ்மக்களால் தவிசாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஒப்பந்தகாரர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர்.

கடந்த 3 தசாப்தகாலமாக எதுவிதப் புனரமைப்பும் இன்றி குன்றும் குழியுமாகவும் காணப்பட்ட மேற்படி வீதியானது தற்போது புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது. (அ-7)




### வலிகாமம் வடக்கு

# கடற்தொழிலாளர் சங்க செயலாளரின் குடும்பத்தவர் மீது தாக்குதல்

## ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி சக்கோட்டை பகுதியில் இரு தரப்புக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதில் வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாச செயலர் யோகராசாவின் குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அல்வாய் வட மத்தி சக்கோடைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அப்பகுதி வீடொன்றின் முன் நின்ற குடும்பப் பெண்ணுடன் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் தகாத வார்த்தை பிரயோகம் மேற்கொண்டதனாலேயே இம் மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களின் சகாக்கள் 30 இற்கும் மேற்பட்டோர் குறித்த பெண்ணின் குடும்பஸ்தார் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் சுப்பையா யோகராசா ( வயது-53), யோகராசா சிதம்பரநாயகி (வயது 41), யோகராசா கிரிதரன் (வயது 23), யோகராசா சங்கீதன் ( வயது 19), சங்கீதா (வயது 18) என்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இவர்களது வீடும் பலத்த சேதமாக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-3-24)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி,பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்திவரையான பிரதேசம், கல்வியங்காடு,நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின்விநியோகம் தடைப்ப்பட்டிருக்கும் என் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# தீவக கல்வி வலயத்தில் கோட்டக்கல்வி பணிப்பாளர் பதவிவெற்றிடம்

வடமாகாணத்தின் தீவக வலயக் கல்வி அலுவலகத்தில் கடமை நிறைவேற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் (வேலணை) பதவி வெற்றிடமாகவுள்ளதாக மாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.இப்பதவிக்கு ஆகக் குறைந்தது 3 வருடமேனும் சேவையாற்றக்கூடிய வய தெல்லையுடைய இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1, 2-I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு யாழ். மாவட்டப் பாடசாலையைச் சேர்ந்தவர்களே விண்ணப்பிக்கலாம். இ.அ.சே. 1 இல் பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் மட்டுமே இ.அ.சே. 2-I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து தெரிவு மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப் பப்படிவத்தினை வலயக் கல்விப் பணிப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ)

# மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவு


(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் 15 வயதுப்பிரிவு ஆண், பெண் இருபாலாருக்கும் நடைபெற்ற கபடிப்போட்டியில் வெற்றிபெற்று மாகாணமட்டப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.இதில் ஆண்கள் முதல் இடத்தைப் பெற்று சம்பியனாகியதுடன் பெண்கள் 3ஆம் இடத்தைப்பெற்று மாகாணமட்டக் கபடிப்போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (அ-3-29)

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## 17.05.2012 - 28.05.2013

## களைப்பின்றி பணிபுரியுங்கள்... வெற்றிக்கனியை எட்டிப்பிடிப்பீர்கள்!



### மூலம், பூராடம், உத்ராடம் 1 ஆம் பாதம்

**யோசித்துச் செயற்பட்டால் யோகம் வரும்!**

**சராசரி மனிதராய் பிறந்து சாதனையாளராகத் திகழும் தனுசு இராசி நேயர்களே!**

சிந்தனை ஆற்றலால் சிறப்பு பெற்றவர்கள் நீங்கள். தெய்வ பக்தியும் உண்டு. தேசபக்தியுமுண்டு. செய்யும் தொழிலே தெய்வம் என்று எடுத்துரைப்பீர்கள் எளிய தோற்றத்துடன் காட்சியளித்தாலும் ஏதேனும் ஒரு இலட்சியம் உங்கள் உள்ளத்தில் இடம்பெற்றிருக்கும்.

எந்தக் காரியத்தை செய்தாலும் முக்கியத்துவமும் முதன்மையும் உங்களுக்கு உண்டு. அதிகாரத்துவ யோகமும் உங்களுக்கு இருப்பதால் அரசியல் செல்வாக்கும் உங்களுக்கு இருக்கும்.

எல்லோரையும் எல்லோரும் ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திய பின்தான் பேசுவர். ஆனால், நீங்களோ மற்றவர் அறிமுகம் செய்து வைக்காமல் நீங்களே அறிமுகம் செய்து கொண்டு பேசத்தொடங்குவீர்கள். இதனால் புதியபுதிய பழக்கங்கள் உங்களுக்கு நிறைய வந்து சேரும்.

தாரம் அமைவது மட்டும் உங்களுக்கு பூர்வபுண்ணியத்தின் வலிமையைப் பொறுத்துத்தான். எனவே பொருத்தம் பார்த்துச்செய்யும் திருமணம்தான் வருத்தம் ஏற்படாமல் இருக்கச்செய்யும். திருமணம் செய்வதற்கு முன்னதாகவே வழிபாடு மற்றும் பரிகாரங்களை மேற்கொண்டால் வாழ்க்கைத் துணை சற்று சிறப்பாக அமையும்.

இதுவரை உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்போழுது 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல என்பார்கள். இருப்பினும் போராட்டமான வாழ்க்கையை பூந்தோட்டமாக அமைத்துக்கொடுப்பது வழிபாடுகள்தான்.

அந்த வழிபாட்டில் தெசாபுத்தியின் அடிப்படையில் பார்த்து சுயஜாதக ரீதியான ஆராய்ந்து பரிகாரங்களை செய்தால் வாழ்க்




கையும் சிறப்பாக அமையும். வழக்கிலும் வெற்றி கிடைக்கும். சேர்க்கையில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும். தித்திப்பான செய்தியும் வந்து சேரும்.

குறிப்பாக 6-ல் சஞ்சரிக்கும் குரு உங்கள் இராசிக்கு 2, 10, 12 அகிய இடங்களைப் பார்க்கப்போகிறார். குரு பார்க்கும் இடங்களுக்கு பலன் அதிகம் இருப்பினும் கேதுவோடு குரு தற்சமயம் சேரப்போவதால் இராகு திசை, கேது திசை, இராகுபுத்தி, கேது புத்தி, வியாழ திசை மற்றும் பிறக்கும் போது சுக்கிரதிசை இருப்பில் பிறந்தவர்களுக்கு எல்லாம் பிரச்சினைகள் வந்து அகலும் முன்யோசனையோடு நடந்துகொள்வது நல்லது. விழிப்புணர்வு கூடுதலாக இருந்தால்தான் வெற்றிகரமாக வாழ்க்கையை நடத்த இயலும்.

#### குருப்பெயர்ச்சி

இத்தனை மகத்துவம் வாய்ந்த உங்கள் இராசிக்கு இதுவரை 5-ல் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்போழுது 17-05-2012 முதல் 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து ஜோரான வாழ்க்கையை வழங்கப்போகிறார். எப்படி 6 ஆம் இடம் என்பது ஜோரான இடம் என்று நீங்கள் நினைக்கலாம்.

மற்ற இராசிக்காரர்களுக்கும் 6 ஆம் இடத்தில் ஒருகிரகம் வந்தால் எதிர்ப்பு, வியாதி, கடன் எனப்படும் மூன்றும் பெருகும். ஆனால், உங்கள் இராசிக்கு அடிப்படையில் கேந்திராதிபத்திய தோஷம்பெற்ற கிரகமாகவும் குரு விளங்குவதால் 6-ல் சஞ்சரிக்கும் போதுதான் அற்புத பலன்களை வழங்கும் அதைக்கொண்டாடினால், நைவேத்தியம் செய்து வழிபட்டால் நினைத்தது நடக்கும்.

குறிப்பாக சூரியனுக்கு உகந்த நாளான ஞாயிறும், அவிட்ட நட்சத்திரமும் இணையும் நாளில் குரு பரிகாரம் செய்வதும் குருவிற்குரிய யாகங்களில் கலந்துகொள்வதும் உங்கள் முன்னேற்றத்துக்கு வித்திடும்.

உங்கள் இரசிக்கும், நான்காம் இடத்திற்கும் அதிபதியாக விளங்கும் குரு இப்போழுது 6-ல் சஞ்சரிக்கப் போகிறார். எனவே எதிரிகளை உதரிகளாக்கி இயற்கையிலேயே வெற்றிவாகை சூடப்போகிறீர்கள். தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.

கேதுவுடன் குரு கூடி சஞ்சரிப்பதால், சர்ப்ப சாந்தி செய்து குருபலம் அதிகரிக்க அதற்கு மறுநாள் குரு பரிகாரம் செய்வது நல்லது.

**தேவகுரு ஆறில் வந்தால்**
**தேவைகள் பூர்த்தியாகும்!**
**ஆவல்கள் தீரவேண்டின்**
**அனுசரிப்பும் தேவையாகும்!**
**கோபத்தை விலக்கினால்தான்**
**குடும்பத்தில் அமைதி கூடும்!**
**தீபத்தில் குருவைக் கண்டு**
**தரிசித்தால் நன்மை சேரும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும் போது, ஆறில் சஞ்சரிக்கும் குருவால் உங்கள் ஆற்றல்கள் பளிச்சிடும். கூட்டு முயற்சியில் மாற்றம் ஏற்படும். கொள்கைப் பிடிப்பை ஒரு சில சமயங்களில் தளர்த்திக்கொள்வீர்கள். அருகில் உள்ள சான்றோர்களையும் ஆன்மீக பெரியோர்களையும் கலந்து ஆலோசித்து ஒருசில முடிவுகளை எடுப்பது நல்லது. கோபத்தை விலக்கி குணத்தைக்கூட்டி, அன்போடு அருகில் இருப்பவர்களை அணுகினால் இன்பங்களை வரவழைத்துக்கொள்ள இயலும்.

6ஆம் இடம் என்பது ரோக ஸ்தானம் மட்டுமல்ல. கடன், பகை, வழக்கு, பொருள் இழப்பு, மனம் தடுமாறும்நிலை, வயிறு மற்றும் சிறுநீரக கோளாறு, பங்காளிப்பகை, விவாகப் பிரச்சினைகள் ஆகியவற்றை அறிந்துகொள்ளும் இடமாகவும் விளங்குகிறது.

எனவே, ரோக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குருவால் குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு ஆரோக்கிய பாதிப்பும், அதனால் சிறுசிறு தொல்லைகளும், விரயங்களும் உருவாகலாம். உத்தியோகத்தைக் குறிக்கும் இடமாகவும் ஆறாமிடம் அமைவதால் பிறக்கும்பொழுது குரு வக்ர இயக்கத்திலிருந்து பிறந்தவர்களுக்கு திடீர் பதவி உயர்வு இப்பொழுது திக்குமுக்காட வைக்கும். மற்றவர்கள் எதிர்பார்த்தபடியே சலுகைகள் கிடைக்க மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்லவேண்டிய சூழ்நிலை அமையும். அலைச்சல் கூடினாலும் ஆதாயம் தரும் விதத்தில்தான் இந்த குருப்பெயர்ச்சி அமைகிறது.

உழைப்பு அதிகமாக இருக்கும். உள்மனதில் கவலைகள் ஒழிந்திருக்கும். களைப்பின்றி பணிபுரிந்தால் கருணை மனம் கொண்ட குரு பகவான் வெற்றிக் கனியை விரைவில் எட்டிப்பிடிக்க வைப்பர்.

#### குருவின் பார்வை பலன்கள்

குருவின் பார்வை பதியும் இடங்களான 2, 10, 12 ஆகிய இடங்கள் புனிதமடைகிறன. குடும்ப ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். உங்கள் திட்டங்களுக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர். சுபவிரயங்கள் அதிகரிக்கும். சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள். வீட்டுக்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

குருவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிவதால் இதுவரை தொழிலில் இருந்த இடையூறுகள் அகலும். போட்டிக் கடை வைத்தவர்கள் வேறிடத்திற்குச் சென்று விடுவர். பொழுதெல்லாம் சம்பாதிக்கும் எண்ணம் மேலோங்கும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து அனைத்து காரியங்களையும் முடித்துக் கொடுப்பர். ஏற்றுக்கொண்ட தொழிலோடு இணையாக வேறுதொழிலும் வந்து சேரும்.

பன்னிரண்டாம் இடத்தில் குருவின் பார்வை பதிவதால் பயணங்கள் அதிகரிக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். பதவி வாய்ப்புகள் வந்து சேரும். அந்நிய தேச அழைப்புகளை எண்ணியவுடன் ஏற்றுக்கொள்ளாமல் சுயஜாதகத்தில் தெசாபுத்தி பலம் பெற்றால் ஏற்றுக்கொள்ளுங்கள். திருப்பணி செய்யும் வாய்ப்புகள் கைகூடி வரும்.

#### வாட்டத்தைப் போக்குமா வக்ர குரு

இடப இராசியில் சஞ்சரிக்கும் குரு 12-10-2012 முதல் 06-02-2013 வரை வக்ர கதியில் இயங்குகிறார். உங்கள் இராசியைப்பொறுத்தவரை குரு, 1, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங்குவதால் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்யும் சூழ்நிலை அமையும். சில காரியங்களைச் செய்துவிட்டு ஆஹா இப்படிச் செய்து விட்டோமே என்று பின்னால் வருத்தப்படுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல் லைகள் ஏற்பட்டு அகலும். உற்றார், உறவினர்களின் மனக்கசப்பிற்கு ஆளாக நேரிடலாம். நண்பர்களிடம் ஒப்படைத்த பொறுப்பு மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம்.

பிறருக்குப் பொறுப்புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது. புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்துப் போடும்போது கொஞ்சம் யோசித்துச் செய்வது நல்லது. இனம் புரியாத கவலை உருவாகலாம். தொட்ட காரியங்களில் வெற்றி ஏற்பட துணையாக இருக்கும் நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்ய, கட்டளையிட்டவர்கள் ஒழுங்காக பணிபுரிய, கரங்களில் பணப்புழக்கம் அதிகரிக்க, வெற்றி என்ற மூன்றெழுத்து வந்து சேர, வியாழபகவானை முறையாக வழிபடுவது நல்லது.

இந்தக் குருப்பெயர்ச்சியால் வரவும் செலவும் சமமாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உறவினர்கள் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. உள்ளத்தில் நினைக்கும் எண்ணங்களை உடனுக்குடன் செய்யாமல் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளையும் கேட்டு செய்வது நல்லது. விலை உயர்ந்த பொருட்களை வீட்டுக்கு வாங்கிச் சேர்ப்பீர்கள். கணவன்-மனைவிக்குள் கனிவுகூட ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நல்லது. ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். குழந்தைகளை கூடுதல் கவனம் செலுத்தி பார்த்துக் கொள்வது அவசியமாகும். நாகசாந்தியும் குருபரிகாரமும் செய்வது நற்பலன்களை வழங்கும்.

#### வளர்ச்சி தரும் வழிபாடு

ஆறமிடத்து குருவால் ஆச்சரியப் படத்தக்க வாழ்வு அமைய வியாழன் தோறும் வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே என்ற கவசம் பாடி குருவை வழிபடுவதோடு சிவனையும் சக்தியையும் வழிபட்டு வாருங்கள். பொருளாதாரநிலை உயரும்.

சிவல்புரி சிங்காரம்

(தொடரும்)


## அதிசய உலகம்...

# மனிதர்களைப்போல் இரு கால்களால் நடக்கும் கரடி



சீனாவில் கறுப்புக் கரடிகளை வைத்து பல விதமாக பணம் சம்பாதிக்கின்றனர். கிழக்கு சீனாவில் Qingdao எனும் நகரில் உள்ள circus இல் இரு கறுப்பு கரடிகளுக்கு பாய்ந்து ஓடவும் மனிதர்கள் போல் நடக்கவும் இரண்டு கால்களில் பாய்ந்து ஓடவும் பயிற்சி அளிக்கப் படுகின்றது.இந்த கரடியின் விளையாட்டை கண்டு அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் வியந்து போகின்றனராம். இந்த கரடியின் விளையாட்டை நீங்களுமீ பாருங்கள். பார்க்கும் போது கரடி வேடமிட்ட மனிதன்தான் இப்படி எல்லாம் செய்வதுபோல் தோன்றும். ஆனால் , உண்மையான கரடியின் விளையாட்டுக்கள் தான் இவை .

# மரக்கறி, பழங்களினால் உருவாக்கப்பட்ட சிற்பங்கள்



# பட்டதாரியாகி அசத்திய சுத்திகரிப்பாளர்-Gac filipaj



கொலம்பியா பல்கலைக் கழகத்தில் சுத்திகரிப்பாளராக தொழில் பார்த்து வந்த 52 வயதான Gac filipaj என்பவர் படித்துப் பட்டதாரியாகி அசத்தியுள்ளார்.

இவர் கடந்த பன்னிரண்டு வருடங்களாக முழுநேர தொழில்புரிந்ததுடன் பகுதிநேரமாக பட்டப்படிப்பை தொடர்ந்துள்ளார். இவ்வாறு இரவு. பகல் பாராத கடின உழைப்பினால் இறுதியில் அதே பல்லைக்கழகத்தில் பட்டத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதையல் கொள்ளையில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

புதையல் கொள்ளையில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

புதையல் திருட்டு மற்றும் வரலாற்று சிறப்புமிக்க பொக்கிஷங்களை களவாடுவோருக்கு எதிராக கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அரும் பொக்கிஷங்கள் மற்றும் புதையல் கொள்ளைகளில் ஈடுபடுவோருக்கு எதிரான சிறைத்தண்டனை மற்றும் அபராதங்களில் மாற்றம் கொண்டு வரப்படவுள்ளது.

குற்றச்சாட்டுக்கள் சந்தேகமின்றி நிரூபிக்கப்பட்டால் குற்றவாளிகளுக்கு ஐந்தாண்டு கால சிறைத்தண்டனையும் இரண்டு மில்லியன் ரூபா வரையிலான அபராதமும் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் புதையல் திருட்டில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு இரண்டாண்டு கால சிறைத்தண்டனையும் 50 ஆயிரம் ரூபா அபராதமுமே விதிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான வரைவுத் திட்ட சட்டங்கள் விரைவில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப் படுகின்றது.

(அ-2)

# சரணடையாத புலிகள் மக்கள் மத்தியில் உள்ளனர்

## கோத்தபாய தெரிவிப்பு

(கொழும்பு)

இறுதிக் கட்டப்போரின் போது இராணுவத்தினரிடம் சரணடையாத தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் மக்கள் மத்தியில் வாழ்ந்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாள்தோறும் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. சரணடையாதவர்கள் யார் யார் என்பது இன்னமும் புலனாகவில்லை.

இவ்வாறு சரணடையாது மக்களுடன் மக்களாக புலி உறுப்பினர்கள் வாழ்ந்து வருவது நாட்டுக்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

பல நாடுகளில் இயங்கி வரும் சில அமைப்புக்கள் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த முயற்சி எடுத்து வருகின்றன என பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் மீண்டும் இயங்குவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பியசேன எம்.பி. தொடர்பான வழக்கு தீர்ப்பு ஜூலை 16 இல்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பீ.எச்.பியசேனவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து நீக்குவதற்கு எதிராக நிரந்தர தடை விதிப்பதா இல்லையா என்பது குறித்து எதிர்வரும் ஜூலை 16 ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்படும் என கொழும்பு மாவட்ட நீதிபதியிடம் மிக கனேபொல நேற்று முன்தினம் அறிவித்தார்.

18 ஆவது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததற்கு எதிராக பீ.எச்.பியசேனவை கட்சியில் இருந்து நீக்குவதற்கு எதிராக நீதிமன்றம் ஏற்கனவே இடைக்கால தடை விதித்துள்ளது. இது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தரப்பு சட்டத்தரணிகள் தமது தரப்பு வாதங்களை முன் வைத்தனர்.

இந்த இடைக்கால தடை உத்தரவை இரத்து செய்யுமாறு அவர்கள் கோரினர். தன்னை கட்சியில் இருந்து நீக்குவதற்கு எதிராக பியசேன எம்.பி. இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார். மனுதாரர் சார்பாக சட்டத்தரணி பைசர் முஸ்தபா ஆஜரானார். (அ-2)

# கணித நாடகப் போட்டி முடிபுகள்

(பூந்தோட்டம்)

மாணவர்களின் கணித எண்ணக்கருக்களை நாடகங்கள் மூலம் விருத்தி செய்யும் நோக்குடன் வவு னியா தெற்கு கல்வி வலயம் கடந்த சனிக்கிழமை வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் கணித நாடகப் போட்டியினை நடத்தியது.

சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட பிரிவுகளாக இடம்பெற்ற இப்போட்டிகளில் பாடசாலைகள் வெற்றி பெற்ற பாடசாலையின் பெயர் விபரத்தினை கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பா. பாலச்சந்திரன் அறிவித்துள்ளார்.

இதில் முதல் மூன்று இடங்க ளைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**கனிஷ்ட பிரிவு**

இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, பண்டாரிக்குளம் விபுலானந்தாக்கல்லூரி


**சிரேஷ்ட பிரிவு**

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், முதலியார் குளம் றோ.க. த.கலவன் பாடசாலை. (அ-2-266)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 131

துருப்புகளின் இடமாற்றமும் இவற்றை மேமெல் நடவடிக்கைக்குத் தயார்ப்படுத்துவதும் இரசியமாகச் செயற்பட்டன என்பதை ஜேர்மனிய ஆவணங்களும் மெய்ப்பிக்கின்றன. தோபெலே, எல்காவா, இடங்களில் தான் சோவியத் துருப்புகளின் தாக்குதலை பாசிஸ்டுகள் எதிர்பார்த்தனர் என்பது 1944 செப்ரெம்பர்-அக்ரோபருக்கான இராணுவ நடவடிக்கைகளைப் பற்றிய வடக்கு படைத்தொகுதியின் பதிவேட்டிலிருந்து தெரிகிறது.



2-வது உலக யுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட 2 டன் எடையுடைய குண்டு

கூடிய விரைவில் பொதுத் தாக்குதலுக்கு மாறிச் செல்லும் பொருட்டு எல்காவாவிற்கு மேற்கே தனது டாங்கி யூனிட்டுகளின் தாக்குதல் இடங்களை காலட்படையைக் கொண்டு பலப்படுத்துவதற்காக எதிரி தனிப்பட்ட திசைகளில் இருந்து துருப்புகளை விலக்குகிறான் என்று வடக்கு படைத் தொகதியின் தளபதி கெர்னல் ஜெரல் ஷேர்னர் செப்ரெம்பர் 26 ஆம் திகதி ஹிட்லரிடம் அறிவித்தான்.

அக்டோபர் 5 ஆம் திகதி 1-வது பால்டிக் சேனையின் துருப்புகள் தாக்குதலில் இறங்கின. சண்டையின் போக்கில்தான் பாசிச படைத் தலைமையால் சோவியத் துருப்புகளுடைய தாக்குதல் நடவடிக்கையின் அளவையும் பிரதான தாக்குதல் திசையையும் நிர்ணயிக்க முடிந்தது. அடுத்த நாளே பாசிஸ்டுகள் ரீகா பிரதேசத்திலிருந்து 39-வது டாங்கி கோர்பஸ்பிரிவுளை மேமெல் திசைக்கு உடனடியாக அனுப்பினர்; ஆனால், இது காலம் கடந்ததாயிருந்தது. சோவியத் துருப்புகளின் பலத்த திடீர்த் தாக்குதலால் ஜேர்மனியர்களுடைய 3-வது டாங்கிப்படையின் தற்காப்பு தகர்ந்து வீழ்ந்தது. அக்டோபர் 10 ஆம் திகதி 1-வது பால்டிக் சேனையின் துருப்புகள் மேமெலுக்கு வடக்கேயும் தெற்கேயும் பால்டிக்கடலின் கரையோரத்தை அடைந்தன.

2-வது பால்டிக்சேனையின் துருப்புகளும் தைரியம், சமயோசித புத்தி, பெரும் வீரம் முதலியவற்றை வெளிப்படுத்தி வெற்றிகரமாக இயங்கின. இவ்வாறாக ரீகா திசையில் எதிரியின் பால்டிக் படைத்திரட்டை துண்டிக்கும் முயற்சிகள் தோல்வியடைந்த பின் உயர்மட்ட பிரதான படைத் தலைமையகம் மேமெல் திசையில் வெற்றிகரமாகத் தன் திட்டத்தை நிறைவேற்றியது.

சோவியத் விமானப்படை மேமெல் நடவடிக்கையில் பெரும் பங்காற்றியது. உதாரணமாக வானில் ஆதிக்கம் செலுத்திய 3-வது வான்படை, சண்டைகளின் போது 5 ஆயிரத்து 916 பறத்தல்களை நடத்தியது. எதிரியின்மீது 1 இலட்சத்து 28 ஆயிரத்து 548 குண்டுகளை வீசியது. 2 இலட்சத்து 16ஆயிரத்து 289 ஜெற் மற்றும் விமானக் குண்டுகளை எறிந்தது.

ரீகா திசையில் சீகுல்தா எல்லையில் எதிரியின் தற்காப்பை போகின்ற போக்கில் பிளக்க 3-வது, 2-வது பால்டிக்சேனைகள் மேற்கொண்ட ஒருசில முயற்சிகள் தோல்வியடைந்பின் இவை தாக்குதலுக்கான திட்டமிட்ட தயாரிப்பில் இறங்கின.

பாசிச ஜேர்மனியப்படைத்தலைமை மேற்கு த்வினாவிற்கு வடக்கே தனது படைத்திட்டிற்கு ஏற்பட்ட நம்பிக்கையற்ற நிலையை உணர்ந்து இந்த எல்லையிலிருந்து தன் துருப்புகளை பின் வாங்குவதென முடிவு செய்தது. அக்ரோபர் 6 ஆம்திகதி இரவு 3-வது, 2-வது பால்டிக் சேனைகளின் மண்டலத்தில் எதிரி பின்வாங்குவது கண்டு பிடிக்கப்பட்டது. இதனால் எதிரியைத் துரத்திச் சென்று முறியடித்து ரீகாவைப் பிடிக்கும்படி ஷேசைனைகளுக்கு கட்டளையிடப்பட்டது.




2-ம் உலகயுத்த காலப்பகுதியில் ஜேர்மனிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்து பின்னர் போர்க்குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்ட அதிகாரி-அல்பிரட் றொசன் பேர்க்

தாக்குதலை எதிர்த்து நிற்க இயலவில்லை. அக்ரோபர் 13 ஆம் திகதி நகரம் விடுவிக்கப்பட்டது. எதிரி லியலுூப்பெ ஆற்றின் எல்லைக்கும் மேற்கொண்டு தூக்கும்ஸ் தற்காப்பு எல்லைக்கும் பின்வாங்கத் தொடங்கினான். சோவியத் துருப்புகள் துரத்திச் செல்லத் தொடங்கின.

செப்ரெம்பர் 29 முதல் நவம்பர் 24 வரையான காலட்டத்தில் லெனின்

2 ஆம் உலக யுத்த காலப்பகுதியில் மிகநவீன நீர்மூழ்கி என்று கருதப்பட்ட டச்சுகக்காரர்கால் வடிவமைக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல்




பால்டிக் குடியருசுகளில் சோவியத் துருப்புகள் அடைந்த வெற்றிக்கு பெரும் இராணுவ அரசியல் முக்கியத்துவம் இருந்தது. இதன் பயனாய் லாத்விய மற்றும் லித்வேனிய சோவியத் சோசலிஷ குடியரசகளின் சிறு பகுதிகளைத் தவிரபால்டிக் குடியரசுகளின் கிட்டத்தட்ட முழுப்பகுதியும் விடுவிக்கப்பட்டது. 30 இற்கும் மேற்பட்ட பாசிச ஜேர்மனிய டிவிஷன்கள் தூகும்ஸிற்கும் லிபாவாவிற்கும் இடையே மாட்டிக்கொண்டன. இவை இங்கே யுத்தத்தின் இறுதியில் சரணடைந்தன. எந்த ஓர் அனுகூலமான தாக்கு முனையிலிருந்து கிழக்கு பிரஷ்ய திசையில் இயங்கிய சோவியத் துருப்புபகளை பாசிச ஜேர்மனி அச்சறுத்தி வந்ததோ அந்தத் தாக்கு முனையை அது இழந்தது. பால்டிக் குடியரசுகள் விடுவிக்கப்பட்டதானது செம்பதாகை பெற்ற பால்டிக் கப்பற்படை நன்கு இயங்குவதற்கான சூழ்நிலைகளைக் கணிசமாக மேம்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

காலையிலிருந்து 3-வது, 2-வது பால்டிக்சேனைகளின் துருப்புகள் பின்வாங்கிக் கொண்டிருந்த எதிரியை துரத்திச் சென்று நாளின் இறுதியில் சீகுல்தா தற்காப்பு எல்லையின் 2-வது வரிசையை அடைந்தன. சில தனிப்பட்ட இடங்களில் அதனுள் புகுந்தன. அதற்கடுத்த நாட்களில் இவை சீகுல்தா தற்காப்பு எல்லையை முழுவதுமாகப் பிளந்துகொண்டு அக்ரோபர் 10 வாக்கில் ரீகா நகர வட்டத்தை அடைந்தன. இது மேமெல் திசையில் தனது துருப்புகளை உரிய நேரத்தில் மாற்றியமைக்க எதிரிக்கு வாய்ப்பளிக்கவில்லை. இங்கே முதலாவது பால்டிக் சேனையின் யுனிட்டுகள் பால்டிக்கடலை அடைந்து எதிரியின் பால்டிக் படைத்திரட்டு முழுவதும் கிழக்கு பிரஷ்யாவுக்கு பின்வாங்கிச் செல்லும்வழியை துண்டித்தன. எனவே ரீகா பிரதேசத்தில் பாசிஷ்டுகள் கடுமையான தற்காப்பிற்கு மாறினர். ஆனால், இதுவும் அவர்களைக் காப்பாற்றவில்லை. இவர்களால் சோவியத்துருப்புகளின்

பால்டிக்கில் நவீன துப்பாக்கிகளுடன் சோவியத் வீரர்கள்



கிராட்சேனை செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கப்பற்படையோடு சேர்ந்து மோன்சூன்ட் தீவுகளை பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து விடுவித்தது.

படுத்தியது. இதன் நீர்மூழ்கிச் சக்திகளும் நீர்மட்டச் சக்திகளும் பின்லாந்து வளைகுடாவிலிருந்து திறந்த கடற்பரப்புக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றன.

(தொடரும்)

# கிரகதோஷங்களை நீக்கும் வியாழபகவான்

## குரு பார்க்க கோடி நன்மை

**வைகாசி 4 ஆம் நாள் இன்று வியாழக்கிழமை குருபகவான் மேட இராசியில் இருந்து இடப இராசிக்கு பிரவேசிக்கின்றார்.**

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாய் அணுவிற்கு அணுவாய், அப்பாலுக் கப்பாலாய், பிரம்மமாய், ஜோதிப் பிளம்பான இறைவன் படைப்பிலடங்கிய ஜீவராசிகள் அனைத்தும் தத்தமது முன் வினைகளுக்கேற்ப சுகங்களையும் துக்கங்களையும் அனுபவித்து வருவது கண்கூடு.

ஜீவராசிகளின் முன்வினைகளுக்கேற்ப சுக- துக்கங்களை அதன் பலாபலன்களை இறைவன் ஆகர்ஷண சக்திமூலம் பூமியுடன் தொடர்பு கொண்டுள்ள கிரகங்களின் மூலமாக நமக்கு அளித்து வருகிறார் என்பதனை ஜோதிட சாஸ்திரம் மூலம் நாம் அறிகின்றோம்.

பூமியில் பிறக்கின்ற ஒவ்வொரு ஜீவனும் பிறக்கின்ற நேரத்தில் இராசி மண்டலத்தில் எந்த இடத்தில் எந்த கிரகம் சஞ்சரிக்கின்றதோ அதைப் பொறுத்தே வாழ்வில் நன்மையும் தீமையும் மாறி மாறி அனுபவிக்கின்றனர்.

அரசனாக சுகமாக, வளமாக வாழ்வதும் ஆண்டியாக வறுமைக் கோட்டில் வாழ்வதும் நோய் நொடிகளில் துன்பப்படுவதும் கல்விமானாக சிறந்து விளங்குவதும் வளமான தொழில் அமைவதும் நல்வழிகாட்ட நல்ல குரு அமைவதும் வாழ்க்கைத் துணையாக நல்ல மனைவி அமைவதும் ஜாதகத்தில் கிரகங்களின் இடத்தைப் பொறுத்தே அமைவதாகும்.

சுபக்கிரகமாக விளங்கும் குரு பகவான் தனுசு- மீன இராசிகளுக்கு அதிபதி கடக இராசியை உச்சம் பெறும் வீடாகவும் மகர இராசியை நீசம் பெறும் வீடாகவும் கொண்டவன். புனர்பூசம், விசாகம், பூரட்டாதி குருபகவானுக்கு விருப்பமான நட்சத்திரங்களாகும். வாழ்வில் ஒருவன் சிறப்புகள் பெறவேண்டுமானால் குரு பகவானின் அருட்பார்வை நிறைந்திட வேண்டும்.

தேவர்கள், முனிவர்களுக்கு நல்லறிவு, ஆன்மீக ஞானத்தை வழங்கும் ஞான குருவான வியாழ பகவானுக்கு பிரகஸ்பதி என்ற பெயர் ஏற்பட்டது.

குருபகவான் ஒரு இராசியில் இருந்து மற்றொரு இராசிக்கு செல்ல ஓராண்டுகாலமாகும். ஒருவருடைய ஜாதகத்தில் குரு உச்சம் பெற்றாலும் ஆட்சி பெற்றாலும் அந்த ஜாதகனுக்கு நல்லொழுக்கம், சாஸ்திர ஆராய்ச்சி, தர்ம சிந்தனைகள் ஏற்படும் என்பது சாஸ்திர விதியாகும்.

ஒருவனுடைய ஜாதகத்திலுள்ள கிரகதோஷம் குருபகவானின் பார்வையினால் விலகுகின்றது. அதனாலேயே...

குரு பார்க்க கோடி நன்மை என்று சாஸ்திரமறிந்தவர்கள் கூறுவர்.

வாக்கிற்கும் அறிவுக்கும் அதிதேவதையான குரு உச்ச வீடாகிய கடக இராசியில் இருக்கப் பிறந்த ஜாதகன் என்றுமே சுகமான வாழ்வு வாழ்வான் என்பது ஜோதிட சாஸ்திரம்.

வியாழ சுகம் குறைந்தவர்கள் வியாழக்கிழமைகளில் மஞ்சள் கலந்த நீரினால் வியாழ பகவானுக்கு அபிஷேகம் செய்வித்து மஞ்சள் நிற பட்டுச்சாத்தி முல்லை, பொன்நொச்சி மலர்களால் அர்ச்சனை செய்து மஞ்சள் கலந்த எலுமிச்சம் பழரசத்தால் அன்னம் படைத்து கடலை நிவேதனம் செய்து குருபகவானுக்கு விருப்பமான அடானா இராகத்தில் கீர்த்தனைகள் பாடி வழிபட்டால் குரு கிரக தோஷங்கள் நீங்கி வாழ்வில் சுகம் உண்டாகும். பசு நெய்யினால் தீபம் ஏற்றி வழிபட்டால் எல்லா நன்மைகளும் ஏற்படும்.

குருப்பெயர்ச்சி (வியாழ மாற்றம்) காலத்தில் வியாழ பகவானுக்கு கடலைச்சுண்டல் நிவேதனம் செய்து மஞ்சள் நிற வஸ்திரம் தானம் செய்து அரசு சமித்தினால் ஹோமம் செய்து 9,12,16,24 என்ற எண்ணிக்கையில் நெய் தீபம் ஏற்றி வழிபட்டால் சகல தோஷங்களும் நீங்கப் பெற்று சுகானந்த பெருவாழ்வு வாழலாம்.

மேலும் சுவாதி, அவிட்டம், ஆகிய நட்சத்திரங்கள் வியாழக்கிழமையில் அமைந்தால் அன்றைய நாள் குரு பகவான் வழிபாட்டிற்கு மென்மேலும் சிறப்புடையதாகும்.

இந்த குருப்பெயர்ச்சியில் இடபம், மிதுனம், சிங்கம், தனுசு, துலாம், மீன இராசிகளில் பிறந்தவர்கள் வியாழக்கிழமைகளில் குரு பகவானையும் தெட்சணாமூர்த்தியையும் விரதமிருந்து வழிபட்டால் எல்லா நன்மைகளும் உண்டாகும்.

தன்னைப் பணிந்து விரதமிருந்து வழிபடும் அடியவர்களுக்கு அவரவர் வேண்டும் வரங்களைத் தந்து குற்றங்களைக் களைந்து ஆபத்துக்களைப் போக்கி நோய், நொடிகளை அகற்றி வேண்டிய செல்வங்களையும் கௌரவத்தையும் நல்ல சந்ததி ஏற்பட சற்புத்திர பாக்கியத்தையும் தருபவர், தனகாரகன், புத்திரகாரகன், பீதாம்பரர் , பிரஹஸ்பதி, வியாழபகவான் எனப் போற்றப்படும் குரு பகவான்.




ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்
சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி,
அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடம்,
கொழும்பு.

குருப்பெயர்ச்சி தினமான இன்று நாமும் ஆசாரசீலராக விரதமிருந்து ஆலயம் சென்று குரு பகவானையும் தெட்சணாமூர்த்தியையும், இஷ்ட தெய்வங்களையும் குல தெய்வங்களையும் வணங்கி, வழிபட்டு குரு பார்வை பெற்று சகல தோஷங்களும் நீங்கப்பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக!

மறைமிகு கலைநூல் வல்லோன்
வானவர்க் காவின் மந்திர்
நறைசொரி கற்பகப் பொன்
நாட்டினுக் அதிபனாகி
நிறைதனம் சிவிகை மண்ணில்
நீடு போகத்தை நல்கும்
இறையவன் குரு வியாழன்
இரு மலர்ப் பாதம் போற்றி!

# பல்கலைக்கழகங்கள் புதுமை படைக்கக்கூடிய படைப்பாளிகளை உருவாக்க வேண்டும்

## உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி



(கொழும்பு)

பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பை உறுதிப்படுத்த வேண்டியது அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்குமான பொறுப்பு. இதற்கு ஏற்ற வகையில் பல்கலைக்கழக கற்பித்தல் முறைகளில் மாற்றங்களை செய்ய வேண்டிய காலத்தின் தேவை தோன்றியிருப்பதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்காலத்துக்கான கற்றல் மற்றும் கருத்துப் பரிமாற்றம் என்னும் தலைப்பில் கொழும்பு ஜானகி ஹோட்டலில் நடைபெற்ற செயலமர்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

பெருந்தொகையான நிதியை செலவு செய்து பட்டதாரிகளுக்கு அரசாங்கம் கல்வி வழங்கிவரும் நிலையில் தொழிற்சந்தைக்கு ஏற்ற வகையில் அவர்களை தயார்ப்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

புதுமை படைக்கக் கூடிய, நாட்டுக்குத் தலைமை தாங்கக்கூடிய படைப்பாளிப்பட்டதாரிகளை உருவாக்கவேண்டிய கடமை பல்கலைக்கழகங்களுக்கு உண்டு.

இதற்குத் தேவையான வகையில் தேவையேற்பட்டால் பல்கலைக்கழக கற்பித்தல் முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களும் திறமைமிக்கவர்கள். அவர்களிடமிருக்கும் திறமைகளை வெளிக்கொணரச் செய்யும் கடமை பல்கலைக்கழகங்களுக்கு உண்டு. இதற்கான பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழில்வாய்ப்புக்களை உறுதிப்படுத்தக் கூடிய வகையிலான திறன்கள் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வளர்க்கப்பட வேண்டும்.

பல்கலைக்கழகங்களுக்கு கட்டடங் களை அமைப்பதற்கு மாத்திரம் மூலதனம் பயன்படுத்தப்படக்கூடாது.

சிறந்த பட்டதாரிகளை உருவாக்குவதற்கும் அதற்கான தளத்தை அமைப்பதற்கும் மூலதனம் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சதுரங்கப்போட்டி முடிவுகள்

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற சதுரங்கப்போட்டியில் 15 வயதுப்பிரிவில் ஆண், பெண் இரு போட்டிகளிலும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தை சேர்ந்த வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணிகள் சம்பியனாகியன.

15 வயதுப்பிரிவில் சதுரங்கப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு,

**ஆண்கள் பிரிவு**

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், புதுக்குளம் மகா வித்தியாலயம், சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை

**பெண்கள் பிரிவு**

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம், இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, சுந்தரபுரம் அ.த.க. பாடசாலை. (அ-2-266)

# ஏறாவூர் தாமரைக்கேணி குடிசைகள் தீக்கிரையாகின

கிழக்கு மாகாணத்தில் யுத்த வெற்றிக்குப் பின்னர் யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்பட்ட ஏறாவூர் தாமரைக்கேணி அல் அக்சா கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் மூன்று குடிசைகள் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

85 முஸ்லிம் குடும்பங்கள் மீள் குடியேற்றப்பட்டு வசித்து வரும் இக்கிராமத்தில் குடிசைகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளமை மூன்றாவது தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த இடத்துக்கு விஜயம் செய்த ஏறாவூர் வர்த்தக சங்கத் தலைவரும் நகர சபை உறுப்பினருமான எம்.எல். றவுபாசம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை வழங்கி வைத்ததோடு மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இச்சம்பவம் தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (அ-2)

# 4 வகையான டெங்கு வைரஸ்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டன

## தொற்றுநோய் தடுப்புப்பிரிவு தெரிவிப்பு

(கொழும்பு) —

**இலங்கையில் நான்கு வகையான டெங்கு வைரஸ்கள் காணப்படுவதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்திருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப்பிரிவு தெரிவித்துள்ளது.**

இந்த நான்கு வகையான டெங்கு வைரஸ்களும் டிவி1, டிவி2, டிவி3, டிவி 4 அடையாளப்படுத்தப்படிருப்பதாகவும் அப் பிரிவு அறிவித்துள்ளது. நாட்டில் நான்கு வகையான டெங்கு வைரஸ்கள் காணப்பட்ட போதிலும் தற்போது டிவி1 வகை வைரஸ்களே பரவியுள்ளதாகவும் அந்த ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மனித செயற்பாடுகள் காரணமாகவும் சுற்றாடலில் ஏற்படுகின்ற மாற்றங்களாலும் டெங்கு வைரஸ்களும் மாற்றமடைந்துள்ளன. இது டெங்கு ஒழிப்புக்கு பெரும் சவாலாக விளங்குவதாகவும் அந்த ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டெங்கு நுளம்பு மனித இரத்தத்தை மாத்திரமே உறுஞ்சிக்குடிக்கக் கூடியவை. ஆனால், ஏனைய நுளம்புகள் மனித இரத்தத்தையோ மிருகங்களின் இரத்தத்தையோ ஒரு தடவை தான் குடிக்கும் என்பதும் தெரிய வந்திருக்கின்றது.

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரமாக இவ்வாரம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாரத்தையொட்டி சுகாதார அமைச்சின் நோய் பரவுதல் தடுப்பு பிரிவு இத்தகவல்களை வெளியிட்டிருக்கின்றது.

இதேவேளை, நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளின் நிமித்தம் நாடெங்கிலும் 120 நுண்ணுயிரியல் மருத்துவ நிபுணர்கள் ஆய்வுகளை மேற்கொண்டிருப்பதாக சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் நேற்று தெரிவித்தார்.

முப்படை மற்றும் பொலிஸாரினதும் முழுமையான ஒத்துழைப்புடன் நுளம்பு ஒழிப்பு பணிகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார். (அ-2)

# சன் சீ கப்பலில் அகதிகளை அனுப்ப உதவிய இருவர் மீது வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

தமிழ் அகதிகளை சன் சீ கப்பல் மூலம் கனடாவுக்கு அனுப்ப உதவியதாக இரு தமிழர்கள் மீது கனேடிய நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. லெஸ்லி ஜனா இமானுவல், குணரூபின்சன் கிறிஸ்துராஜா ஆகியோரே கனேடிய அரசினால் நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளனர்.

492 தமிழர்களை கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா கரைக்கு கப்பலில் கொண்டு வருவதற்கான ஒழுங்குகளை செய்ததாகவும் இந்த நடவடிக்கைக்கு உதவியதாகவும் இவர்கள் குற்றம்சாட்டப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் 2009 ஓகஸ்ட் மாதம் தொடக்கம் 2012 ஓகஸ்ட் மாதம் வரை இலங்கை, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து இந்தக் குற்றச் செயல்களுக்குத் திட்டமிட்டதாக நீதிமன்றத்தில் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தொடர்புடைய மூன்றாவது சந்தேக நபர் பிரான்சில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை நாடு கடத்துமாறு கனேடிய அரசாங்கம் கோரியுள்ளது.

சன் சீ கப்பலில் பயணம் செய்த ஆறுபேர் இரண்டு ஆண்டுகளாகியும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை 19 பேரை கனடாவை விட்டு வெளியேறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பீரிசின் அமெரிக்கப் பயணம் குறித்து நிகழ்ச்சி நிரலை வெளியிட அரசு தயக்கம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிசின் அமெரிக்கப் பயண நிகழ்ச்சி நிரல் குறித்த தகவல்களை அரசாங்கம் இரகசியமாகவே வைத்துள்ளது.

இதனால் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் அமெரிக்கப் பயணம் இரகசியப் பயணமா என்ற கேள்வி வோஷிங்டனில் எழுந்துள்ளது. வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகள் பீரிஸ் அமெரிக்காவுக்கு ஒரு இரகசிய இராஜதந்திரப் பயணத்தையே மேற்கொண்டுள்ளதாக கூறியுள்ளனர்.

இரகசியப் பயணம் என்பதால் பீரிசின் நிகழ்ச்சி நிரல் குறித்த தகவல்களை வெளியிடுவதில்லை என்று வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரகம்முடிவுசெய்துள்ளது.ஆனால், வெளிவிவகார அமைச்சின் பயணத்தை இரகசியப் பயணமாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அங்கீகரிக்கவில்லை.

கடந்த வாரம் செய்தியாளர்களிடம் கூறிய இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நுலன்ட் தாம் பீரிசின் அமெரிக்கப் பயண நிகழ்ச்சி நிரலை விரைவில் வெளியிடுவதாகக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கழகங்களுக்கான பதிவு நடவடிக்கை

சூரியயோதய சனசமூக நிலையத்தின் விளையாட்டுக் கழகத்தினரால் மாபெரும் மென்பந்து,துடுப்பாட்ட சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் இம்மாத முடிவுக்கு முன்னர் வரும் வார இறுதி நாட்களான 19,20 ஆம் திகதிகளிலும் மற்றும் 26,27 ஆம் திகதி களிலும் மாலை 4 மணி முதல் 6 மணிவரை பதிவுகளை மேற்கொள்ள முடியும் என விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது. (அ-7)



தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு நாளையுடன் மூன்று வருடங்களாகின்றன. இதற்கான வெற்றிக் கொண்டாட்ட ஏற்பாடுகளை அரசாங்கம் தற்போது மேற்கொண்டு வருகின்றது. இந்த நிலையில் நேற்று முன்தினம் கொழும்பு காலி முகத்திடலில் படையினரின் பிரதான நிகழ்வுக்கான ஒத்திகைகள் இடம்பெற்றதைப் படத்தில் காணலாம்.

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.05 17

★ 1498-வஸ்கொடகாமா இந்தியாவின் கோழிக் கோட்டை அடைந்தார்.

★ 1521- பக்கிங்ஹாமின் மூன்றாவது நிலை சீமானான Duke எட்வேர்ட் ஸ்டாஃபேர்ட் தூக்கிலிடப்பட்டான்.

★ 1590-டென்மார்க்கின் ஆன் ஸ்கொட்லாந்து அரசியாக முடி சூடினாள்.

★ 1792-நியூயோர்க் பங்குச் சந்தை ஆரம்பிக்கப்பட்டது.

★ 1809- பிரெஞ்சுப் பேரரசுடன் இத்தாலியின் திருச்சபை நாடுகளை இணைக்க முதலாம் நெப்போலியன் ஆணையிட்டான்.

★ 1814-நோர்வே நாட்டின் அரசியல் நிர்ணயம் அமைக்கப்பட்டது.

★ 1846- அடொல்ஃப் சாக்ஸ் என்பவரால் சாக்சபோன் வடிவமைக்கப்பட்டது.

★ 1865- அனைத்து தொலைத்தொடர்பு மையம் ஏற்படுத்தப்பட்டது. இது பின்னர் சர்வதேச தொலைத்தகவல் தொடர்பு மையம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.

★ 1915- பிரித்தானியாவின் கடைசி லிபரல் கட்சி ஆட்சி வீழ்ந்தது.

★ 1940- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகரைக் கைப்பற்றியது.

★ 1969-சோவியத்தின் வெனேரா 6 விண்கலம் வீனஸ் கோளின் வளிமண்டலத்துள் சென்று வீனசில் மோத முன்னர் வளிமண்டலத் தரவுகளை பூமிக்கு அனுப்பியது.

★ 1974- அயர்லாந்தில் டப்ளினில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 33 பேர் உயிரிழந்தனர்.

★ 1983- லெபனானில் இருந்து இஸ்ரேல் வெளியேறுவதற்கான உடன்பாடு லெபனான், இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா ஆகியவற்றுக்கிடையில் எட்டப்பட்டது.

★ 1998-தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். நகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 2009-தமிழினப் படுகொலை தினம். வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். நான்காம்கட்ட ஈழப்போர் முடிவுக்கு வந்தது.

**பிறப்பு**

★ 1974- செந்தில் ராமமூர்த்தி, அமெரிக்க நடிகர்

**இறப்புக்கள்**

★ 2006-ஷ்ரத்தா விஸ்வநாதன், தமிழ்த் தொலைக்காட்சி நடிகை

★ 2007- நகுலன், தமிழ் எழுத்தாளர்.

**சிறப்பு நாட்கள்**

★ உலகத் தொலைத் தகவல் தொடர்பு தினம்

★ நோர்வே- அரசியல் நிர்ணய தினம்



★ 1749-ஆங்கில மருத்துவ ஆராய்ச்சியாளர் எட்வர்ட் ஜென்னர் பிறந்த தினமாகும் (இ.1823)

# என் மக்களின் தார்மீக அறத்தை உயிர் வாழவைப்பதற்காகவே எழுதுகிறேன்

## இலங்கை சிங்கள - ஊடகவியலாளர், பாஷண அபேவர்த்தன

**முள்ளிவாய்க்கால் அவலங்கள் அடங்கிய கைபேசி வீடியோவை சனல்-4 இற்கு வழங்கிய, "*இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள்*" (Journalists for Democracy in Srilanka-JDS) என்ற நிறுவனத்தின் ஊடகவியலாளர் பாஷண அபேவர்த்தனவுடனான நேர்காணல்**

**நீங்கள், "*இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள்*" என்ற உங்கள் அமைப்பினர், நண்பர்கள் ஆகியோர் பங்களிப்பு இல்லாமல் சர்வதேச சமூகத்தையே உலுக்கிய கைபேசி வீடியோவில் எடுக்கப்பட்ட படுகொலைக்காட்சிகள் வெளிச்சத்துக்கு வந்திருக்கமாட்டா. இந்த வீடியோ படங்களை சனல்-4 தொலைக் காட்சிக்குத்தான் வழங்க வேண்டும் என எப்படித் தீர்மானித்தீர்கள்?**

முதலில் நான் ஒன்றைக் கூற வேண்டும். இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பயங்கரமான படுகொலைகளும் குற்றச்செயல்களும் இரகசியமாக நடந்தவையல்ல. சர்வதேச அதிகார சக்திகளைப் பொறுத்தவரை இவ்வாறான இன அழிப்பு நடவடிக்கை இடம்பெறப் போகிறது என்பதை ஏற்கனவே அவர்கள் அறிந்திருந்தார்கள். இந்தப் படுகொலைக்களத்தின் ஆர்வம் மிக்க பார்வையாளர்களாக ஏராளமானோர் தொலை தூரத்தில் இருந்தார்கள். இந்த உண்மை ஐ.நா. அவையின் மனிதாபிமானச் செயற்பாடுகளுக்கான தலைவர் சேர்.ஜோன் ஹோல்ம்ஸ் சனல்-4 இல் வெளிப்படையாகக் கூறிய ஒரு கருத்தில் மிக நன்றாகவே பிரதிபலித்தது.

சர்வதேச சமூகத்திலிருந்து யாராவது தடுத்து நிறுத்துவர்கள் என்று இலங்கை அரசு ஒருபோதும் நம்பவில்லை. அதன் கணிப்பு சரியானதே. ஆனால், சில இராஜ தந்திர ஆட்டங்கள் இதைச் சுற்றி நடந்தன. ஆகவே நீண்ட காலமாக நடைபெற்ற இந்த உள்நாட்டுப்போர் இரத்தக்களரியில் முடிந்தமை வழமையான தர்க்கரீதியானது என நாம் பார்க்கமுடியாது. மாறாகக் கள்ளத்தனமாக கணக்கிடப்பட்ட சர்வதேச அரசியல் விளையாட்டின் விளைவாகவே இதனைப் பார்க்க வேண்டும். உலகமெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், பொலிசார் அடித்தபோதும் துன்புறுத்தியபோதும் இழுத்துக் கைது செய்தபோதும் அந்தந்த நாடுகளின் வீதிகளில் பல மாதங்களாக நின்றனர்; ஓலம் எழுப்பினர்; விம்மினர்; கடுங்குளிரையும் பொருட்படுத்தாது எதிர்த்து நின்றனர். பொது மக்கள் சதுக்கங்களைக் கைப்பற்றியிருந்தனர். விரைவு நெடுஞ்சாலைகளை மறித்தனர். பலர் தீக்குளித்தனர். இவை எங்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால், மைய நீரோட்ட ஊடகங்கள் இவற்றிற்கு எத்தகைய முக்கியத்துவமும் வழங்கவில்லை. இனப்படுகொலை இடம் பெறுவதைப் பற்றி உணர்வுபூர்வமான செய்திகள் எதையும் வெளியிடவில்லை.

இப்படியான சூழ்நிலையில்தான் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்ற முதலாவது வீடியோ முக்கியத்துவம் பெறுகிறது. இது வெளிவந்தமை அன்றைய சூழலை ஆட்டங்காணவைத்தது. இலங்கை அரசாங்கத்தைத் தவிர வேறு எவருக்கும் அந்த வீடியோவைப் பொய்யெனச் சொல்லிப் புறந்தள்ளி விடுவதற்கான துணிவு இருக்கவில்லை. இலங்கை அரசாங்கம் வழமைபோலவே இதையும் மறுத்தது. இப்படி மறுப்பது என்பது அவர்களுக்கு ஒரு சடங்கு மாதிரி.

இந்த வீடியோ பிரதிகள் கிடைத்போது உண்மையிலேயே என்ன செய்வது என எங்களுக்குத் தெரியவில்லை. இவற்றை வெளியிடுவதற்குச் சரியான பொருத்தமான வழியைக் கண்டுபிடிக்கும் வரை அவை இரண்டு கிழமைகளாக எங்களிடமே இருந்தன. இக்காலங்களில் சனல்-4 தொலைக் காட்சியுடன் எமக்கு எந்த விதமான உறவும் இருக்கவில்லை. ஆனால் இலங்கை இராணுவத்தால் நடத்தப்படுகின்ற அகதிகள் முகாம்களுக்குள் பலவந்தமாகத் தடுத்து வைக்கப் பட்டிருந்த இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் தொடர்பான இரகசியப் புலனாய்வு அறிக்கை ஒன்றை வெளியிட முயன்ற சனல்-4 இன் பத்திரிகையாளர் ஒருவர் நாடுகடத்தப்பட்டிருந்தார் என்பதை நாம் அறிந்திருந்தோம். ஆகவே இந்த வீடியோவை சர்வதேச மனித உரிமைகள் குழுக்களுக்கும் ஐ.நா. அங்கங்களுக்கும் அனுப்புவதோடு நின்றுவிடாமல் அந்தக் குறிப்பிட்ட பத்திரிகையாளாரையும் தொடர்பு கொள்ள முயன்றோம். ஏனெனில் அப்படியான ஒருவர்தான் இந்த ஆதாரத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இருப்பார் என்பதை உணர்ந்திருந்தோம். ஆனால், அவர் அங்கு இருக்கவில்லை. ஆனாலும், சனல்-4 தொலைக்காட்சியின் வெளிநாடுகளுக்கான செய்திப் பிரிவினரோடு தொடர்புகொண்டு இதன் பின்னணியை விளக்கினோம். இவ்வாறுதான் சனல்-4 தொலைக்காட்சியுடனான உறவுக்கு இறுதியாக வந்தடைந்தோம்.

**நீங்கள் "*இலங்கையின் ஜனநாயகத்திற்கானபத்திரிகையாளர்கள்*" அமைப்பின் முக்கியத்துவமான ஒரு அங்கத்தவர். இந்த அமைப்பு எப்படி உருவானது என்பதைப் பற்றி எங்களுக்குக் கூறுவீர்களா?**

இப்பொழுது தலைமறைவாக வாழும் பல பத்திரிகையாளர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் கூட்டுமுயற்சி ஒன்றே இந்த அமைப்பின் உருவாக்கம். இதன் முதலாம் கூட்டம் 2009 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பெர்லின் நகரில் நடைபெற்றது. இதில் பதினைந்து தமிழ், சிங்களப் பத்திரிகையாளர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். நீண்ட நேர அலுப்பான விவாதங்கள் நம்மை ஒரு முடிவுக்கு கொண்டுவந்து நிறுத்தின. கூட்டான குழுவொன்றை உருவாக்குவதற்கான தேவையையும் முக்கியத்துவத்தையும் நாம் உணர்வதற்கு இந்த விவாதங்கள் நம்மை நிர்பந்தித்தன. அதாவது நாம் தனித் தனியாகச் செய்யும் வேலைகளைக் குழுவொன்றினூடாக ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் செயற்படுத்துவதற்குப் பயன்படுத்தலாம் என்பதையும் உணர்ந்தோம். ஆனால், பிற்காலங்களில் நாம் முன்னெடுத்த செயற்பாடுகள் நமது குழுவின் ஆரம்ப நோக்கங்களை மேலும் தீவிரமாக மாற்றின. ஏனெனில், நாம் குறிப்பிடத்தக்க சர்ச்சைக்குரிய சவாலான வியடங்களைக்கையில் எடுக்கவும் அவற்றுக்கு முகங் கொடுக்கவும் வேண்டி இருந்தது. கடந்த மூன்று வருடங்கள் மிகவும் சவாலான காலங்கள். ஆனால், நாங்கள் அவற்றை எல்லாம் கடந்து வந்தோம். ஆனால், எமது அமைப்பு தனித்திருக்கின்ற மனிதர்களின் கூடாரமாகவோ, சமூகநல நிறுவனமாகவோ உருவாவதிலோ, மாறுவதிலோ ஒருவருக்கும் விருப்பமிருக்கவில்லை. இவையெல்லாம் நம்மை மேலும் இறுக்கமாக ஒன்றிணைய வைத்தன.



**இலங்கையிலிருந்து நீங்கள் வெளியேற்றப்பட்டபின் புலத்தை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான எனது முடிவு அன்றைய சூழ்நிலையால் உருவானது. நானாக நாட்டைவிட்டு வெளியேறத் தீர்மானிப்பதற்குள்ளாகப் பலர் என்னை வெளியேறும்படி நீண்ட காலத்திற்கு முன்பே அறிவுறுத்தினர். சாதாரணமாக இலங்கையில் இவ்வாறான விடயங்களுக்காக முன்கூட்டியே எச்சரிக்கப்படுவதில்லை. ஆகவே, இது தொடர்பான கடிதங்கள் அனுப்புவதோ பயமுறுத்துவதோ வழமையாக நடைபெறுவதில்லை. இதனால் இவ்வாறான முடிவுகள் நமது உள்ளுணர்வுகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட எதிர்வினைகளாகவே இருக்கின்றன. அதாவது பயங்கரமான சூழல்கள் நம்மைச் சூழ்ந்துவருவதை நாம் உணர்கின்ற சந்தர்ப்பங்களில் நமது உள்ளுணர்வானது நாம் வாழ்வதற்கு ஏற்றவகையில் நம்மை வழிநடத்தும். நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முதலான கடைசி மூன்று மாதங்களும் எனது நாளாந்த வாழ்வின் வழமையான செயற்பாடுகளை மாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்தேன். ஏனெனில், நான் எழுதுவது மனித உணர்ச்சிகளைக் கிளர்ச்சியடைய வைக்கக்கூடியது எனவும் இதன் விளைவால் ஏற்படும் பாதிப்புகள் மீள நிவர்த்திக்க முடியாதவை எனவும் என் நண்பர்களும் சக செயற்பாட்டாளர்களும் சிந்தித்தனர். ஆகவே, எனது வீட்டிலிருக்காது தூரத்தில் எங்கேயாவது இருந்தேன். ஒருநாள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை செய்யப்பட்டார். இவர் நம்முடன் பல போராட்டங்களில் முன்னணியில் இருந்த பலரில் ஒருவர். நான் தமிழராகவோ பாராளுமன்ற உறுப்பினராகவோ இல்லாது இருந்த போதும்கூட எனக்கு நெருக்கமாக இருந்த நண்பர்கள் நான் நாட்டை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் எனச் சிந்தத்தார்கள். இதன்பின் மூன்று கிழமைகள் நாட்டிற்குள் இருந்துவிட்டு தலைமறைவாகச் சென்றேன். அன்று நான் எடுத்தமுடிவு சரியானதா என நிச்சயமில்லாது இருந்தபோதும் பிற்காலங்களில் நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்றவற்றை கூட்டிப் பார்க்கிறபோது, எனது முடிவு சரியானது என்பதை உணர்ந்தேன்.

### பொங்குதமிழ்

**மே 2009 நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான உங்களது எதிர்வினை என்ன? அப்பொழுது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?**

இப்போது போலவே போரின் கடைசிக்காலங்களில் நான் தலைமறைவாகவே இருந்தேன். இதனால் 2006 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டேன் நான் நாட்டைவிட்டு மிகத்தூரத்தில் வாழ்ந்தபோது இலங்கைக்குள் ஊடக வேலை செய்யும் என்னுடைய சக நண்பர்கள் பலரைவிடக் குறிப்பிட்ட சூழ்நிலை மற்றும் சம்பவங்கள் தொடர்பாக பல தகவல்களை நன்றாகப் பெற்றுக் கொள்ளும் ஒரு நிலையிலேயே எப்பொழுதும் இருக்கிறேன். இக்காரணத்திற்கான பின்னணி மற்றவர்களைவிட எனக்கு அக்கறை அதிகம் என்பதல்ல. மாறாக இலங்கையில் இருக்கின்ற பல்வேறு தடைகள் காரணமாக அங்கு செயற்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கு இல்லாத சலுகை எனக்கு இருக்கிறது. அதாவது அனைத்து மூலாதார சக்திகளுடனும் தொடர்புகொண்டு எல்லாவகையான தகவல்களையும் எந்தத்தடைகளும் இல்லாது பெற்றுக் கொள்வதற்கான வழிகள் எனக்கு இருக்கின்றன. இந்த ஓர் உண்மையாலும், தலைமறைவாக இருந்த போதும் நான் எழுதுவதைப் பிரசுரிக்கப் பத்திரிகைகள் இருக்கின்றமையாலும் எனது பத்திரிகையாளர் தொழிலைத் தொடர முடிகிறது.

(தொடரும்)

# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள் உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்



### "தடைசெய்யப்பட்ட திட்டம்" என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
  1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
  2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக, போலியான முறையில் காணப்படுகின்றன.

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. திட்டத்தின் இயல்பு - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. உயர் நுழைவுக் கட்டணம் - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும் - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. நிதி வருமானங்கள் - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. மீண்டும் வாங்கும் கொள்கை - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல் - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.

**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம். இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

8. திட்டத்தைப் பற்றிய தகவல்கள் - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள் - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல் - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. பயிற்சிகளும் விற்பனை உதவிகளும் - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. திட்டத்தின் எதிர்காலம் - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. செயற்பாட்டுப் பிரதேசங்கள் - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்தினுடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமடங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு

தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

(சி/013)




# சிறுவர் அரங்கம்

103

## தங்க வளையல்

## அம்புலி மாமா கதைகள்



கந்தன் என்ற வயது முதிர்ந்த விவசாயி தனது மகன் கோபாலனுடனும் மருமகள் ருக்மணியுடனும் ஒரே வீட்டில் வசித்து வந்தான். ருக்மணியின் தம்பி முத்துவும் அவர்களோடு வசித்து வந்தான்.

கந்தன் தனது இடது கையில் தங்கத்தாலான ஒரு கங்கணம் அணிந்து வந்தான். அதைப் பார்க்கும் போதெல்லாம் அவனுடைய மருமகள் ருக்மணியின் கண்கள் பேராசையால் விரியும். தனக்கு அதை வளையலாக்கித் தரக்கூடாதா என்று அவள் நினைப்பது உண்டு. ஆனால் கந்தனோ தங்கக் கங்கணம் தன் கையில் இருக்கும் வரை தன் மருமகள் தன்னை மதிப்பாள் என்று அதை அவளுக்குத் தராமல் காலம் கடந்தி வந்தான்.

ஒருநாள் கந்தன் நீண்டநேரம் இருட்டும் வரை வயலில் வேலை செய்தான். வீட்டிற்குச் செல்ல முனைந்தபோது திடீரென்று இருட்டில் அவனால் எதையுமே பார்க்க முடியவில்லை. தன் வீட்டிற்கு எப்படிச் செல்வதென்றே தெரியாமல் கலவரத்துடன் ஐயோ எனக்குக் கண் தெரியவில்லை! எனக்கு யாராவது உதவி செய்யுங்கள்! என்று கூச்சலிட்டான்.

அந்த நேரம் அவனுடைய மருமகளின் தம்பி முத்து அந்தப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தவன் கிழவன் கூச்சலிடுவதைக் கேட்டு அங்கு வந்தான். கிழவன் கஷ்டப்படுவதைக் கண்டு முத்துவின் மனதில் ஒரு தீய எண்ணம் தோன்றியது. அவனுடைய அக்கா ருக்மணியைப் போலவே அவனும் கந்தனுடைய தங்கக் கங்கணத்தின் மீது பல நாட்களாக ஒரு கண் வைத்திருந்தான்.

ஆகையால் இதுதான் சரியான வாய்ப்பு என கந்தனின் கையிலிருந்து கங்கணத்தைக் கழற்றி எடுத்துக் கொண்டு கந்தனை இருட்டில் நிராதரவாக விட்டு விட்டுச் சென்றுவிட்டான்.


தட்டுத்தடுமாறி வீட்டை அடைந்த கந்தனின் கையில் கங்கணம் இல்லாததைக் கண்டு திடுக்கிட்ட ருக்மணி ஏய் கிழவா? கங்கணத்தை எங்கே தொலைத்தாய்? என்று சீறினாள். உண்மையில் அவளிடம் உனக்குத் தங்க வளையல் செய்வதற்காக அதை நமது கிராமத்துக் கொல்லனிடம் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன்! என்று கந்தன் பொய் சொன்னான். ருக்மணியின் பதற்றம் பெரும் மகிழ்ச்சியாக மாறியது. ஆகையால் அவள் கந்தனுக்கு ராஜஉபசாரம் செய்தாள்.

கங்கணத்தைத் திருடிய முத்து நேராகக் கிராமத்துக் கொல்லனை அடைந்து இதை விற்றுப் பணமாக்கித் தந்தால் பாதிப் பணம் உனக்கு! மீதியை எனக்கு நாளைக்குக் கொடு! என்றான். அதைப் பார்த்தவுடனே அது கந்தனுடைய கங்கணம் என்றும் முத்து அதைத் திருடிக் கொண்டு வந்திருக்கிறான் என்றும் கொல்லன் புரிந்து கொண்டான். அப்படியே விற்றால் பிடிபடுவோம் என்று அதை அழித்து வளையலாகச் செய்து விற்க நினைத்து இரவோடு இரவாக அந்த வேலையில் ஈடுபட்டான்.

கொல்லனின் மனைவி மீனாட்சி இரவு வெகு நேரமாகியதால் தன் கணவன் வேலை செய்யுமிடத்திற்கு வந்தாள். திடீரென அவள் வந்தால் திடுக்கிட்டுப் போன அவன் உன்னை யார் இங்கு வரச் சொன்னார்கள்? போ வெளியே! என்று கோபத்துடன் கூச்சலிட்டதைக் கேட்டு மீனாட்சி உடனே சென்று விட்டாள்.

ஆனால் தன் கணவன் ஏதோ திருட்டுப் பொருளை மாற்றி அமைக்கிறான் என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது. மறுநாள் கந்தனின் மருமகள் ருக்மணி கொல்லனைத் தேடி வந்தாள்.

அவன் வெளியில் சென்று இருந்த



தால் அவனுடைய மனைவி மீனாட்சியிடம் என் மாமனார் எனக்காக ஒரு வளையல் செய்யச் சொல்லி இருக்கிறாராம்! அது எந்த வடிவத்தில் இருக்க வேண்டும் என்பதை என்னைக் கேட்டுச் செய்யச் சொல்! என்று உத்தரவிட்டுப் போனாள்.

கொல்லன் திரும்பி வந்ததும் மீனாட்சி அதைப் பற்றிச் சொல்லவும் அவன் கோபப்பட்டான். இதனால் தன் கணவன் மீதிருந்த சந்தேகம் மீனாட்சிக்கு ஊர்ஜிதம் ஆயிற்று.

ருக்மணி அதற்குள் வீட்டிற்குச் சென்று அனைவர் முன்னிலையிலும் விடயமாகக் கொல்லன் வீட்டிற்குச் சென்று வந்ததைப் பற்றிக் கூறினான். அதைக் கேட்ட கந்தனுக்கும் கங்கணத்தைத் திருடிய



முத்துவிற்கும் திருடனைத் தேள் கொட்டியது போலிருந்தது. இருவரும் மௌனம் சாதித்தனர். ருக்மணியின் கணவனுக்கு இதைக் கேட்டு ஆச்சரியம் உண்டாகியது. அதேசமயம் முத்துவின் முகம் மாறியதையும் அவன் அவசரமாக எங்கோ செல்வதையும் கவனித்தான்.

நேராகக் கொல்லனின் வீட்டிற்குச் சென்ற முத்து உன்னிடம் நான் கங்கணம் கொடுத்தது என் அக்கா ருக்மணிக்கு எப்படித் தெரியும்? என்றதும் கொல்லன் கங்கணமா? ஏது? நீ எப்போது கொடுத்தாய்? என்று நடித்தான். இரகசியம் வெளியானால் முத்து சிக்குவான் என்று தெரிந்ததும் கொல்லனுக்கு கங்கணத்தை விற்று முழுப்பணத்தையும் தானே அடைய வேண்டுமென்று பேராசை ஏற்பட்டது தான் காரணம். இதைக் கேட்ட முத்து அவனை நன்கு திட்டிவிட்டுச் சென்றான்.

நடந்ததை இரகசியமாகப் பார்த்த கொல்லனின் மனைவி மீனாட்சிக்கு ஒரு யோசனை தோன்றியது. தன் வீட்டில் இருந்து சீதனமாக தங்க நகை எதுவும் கொண்டு வராததால் தன்னைத் தன் கணவன் கேவலப்படுத்துவது அவளைப் பல ஆண்டுகளாக உறுத்தியது. அதைத் திருடிக் கொண்டு தன் பிறந்த வீட்டில் கொடுத்து தன் பெற்றோர் அதை சீதனமாகக் கொடுப்பதுபோல் செய்ய வேண்டுமெனப் பார்த்து அதைத் திருடி எடுத்து மறைவிடத்தில் வைத்து விட்டாள்.

வெளியிலிருந்து திரும்பிய கொல்லன் வளையலைக் காணாமல் மனைவியைக் கேட்க அவள் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று சாதித்து விட்டாள். ஆனால் அவனுக்குத் தன் மனைவி மீது சந்தேகம் இருந்ததால் அவளுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான்.

முத்து தன்னை ஏமாற்றிய கொல்லனைக் கொலைச் செய்யத் திட்டமிட்டு இரவு நேரத்தில் அவன் வீட்டை அடைந்தான்.

அதற்குள் கந்தன் தன் மகன் கோபாலனிடம் கங்கணம் திருட்டுப் போன உண்மையைக் கூற கோபாலன் முத்துவை சந்தேகப்பட்டு அவனை உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்தான். அன்றிரவு முத்து வீட்டை விட்டுக் புறப்பட்டவுடன் கோபாலனும் அவனைப் பின் தொடர்ந்தான்.

அன்றிரவு கொல்லனின் மனைவி மீனாட்சி திருட்டு வளையல் வீட்டில் வைக்காமல் வேறு எங்காவது ஒளித்து வைக்க எண்ணி நடு இரவில் வீட்டை விட்டு வெளியேறினாள். தனது மனைவியை வேவுபார்த்துக் கொண்டிருந்த கொல்லனும் அவளைப் பின் தொடர கொ[illegible]செல்வதைக் கண்ட முத்து [illegible]னைப் பின்தொடர முத்துவைக் கோபாலன் பின் தொடர்ந்தான். நடு இரவில் நான்கு பேர் செல்வதைக் கண்டு ஐந்தாவது நபர் ஒருவரும் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

கடைசியில் மீனாட்சி ஒரு பாழடைந்த கோயிலை அடைந்து அங்கு குழி தோண்டி வளையலைப் புதைக்க முயற்சிக்கையில், கொல்லன் அவளைக் கையும் களவுமாகப் பிடிக்க, கொல்லனை முத்து பிடிக்க, முத்துவை கோபாலன் பிடிக்க நால்வரும் காரசாரமாக மோதினர்.

சண் டையை நிறுத்துங்கள்! என்ற கூக்குரல் கேட்டு நால்வரும் திரும்ப அவர்களைப் பின் தொடர்ந்த ஐந்தாவது நபர் தன் வேடத்தை கலைத்தார். அவர் வேறு யாருமல்ல! மாறுவேடத்தில் இரவில் சுற்றிக் கொண்டிருந்த அந்நாட்டு மன்னர் தான் அவர்! மன்னரிடம் முத்துவும், கொல்லனும், மீனாட்சியும் நடந்ததைக் கூறி மன்னிப்பு கேட்டனர்.

முதன்முதலாக திருடிய முத்துவையும் திருட்டுக்கு உடந்தையாக இருந்த கொல்லனையும் சிறையில் அடைக்க மன்னர் ஏற்பாடு செய்தார். கந்தனின் திருட்டு போன கங்கணம் வளையலாக மாறி அவளிடம் வந்து சேர அதை அவன் தன் மருமகளிடம் தந்து விட்டான்.

# டோபல் (TOEFL) தேர்வை எளிதில் வெற்றிபெறுவதற்கான வழிமுறைகள்



டோபல் தேர்வை எழுதும் நபர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் அதை எளிதாக எதிர் கொண்டு வெற்றி பெறும் வழிமுறைகளையும் அறிந்து கொள்ளுதல் புத்திசாலித்தனம்.

வெளிநாட்டில் படிக்கும் ஆர்வத்தைக் கொண்டிருப்பவர்கள் எண்ணற்றவர்கள். வெளிநாட்டில் படிக்கும் பொருட்டு தங்களின் ஆங்கில அறிவை அவர்கள் பரீட்சை மூலம் நிரூபிக்க வேண்டியுள்ளது. அந்த வகையில் ஆங்கில மொழியறிவை நிரூபிக்க நடத்தப்படும் பரீட்சைகளில் டோபல் (TOEFL iBT ) தேர்வு முக்கியமானதாகும்.

இப்பரீட்சையில் பெறும் மதிப்பெண்களை 130 நாடுகளில் உள்ள 8 ஆயிரத்து 500 இற்கும் மேற் பட்ட கல்வி நிறுவனங்கள் அங்கீகரிக்கின்றன. அவுஸ்திரேலியா, பிரிட்டன், கனடா, அல்லது அமெரிக்காவில் கற்க விரும்பினால் டோபல் பரீட்சையுடன் ஒரு ஆங்கிலமொழி மதிப்பீட்டை மட்டுமே எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். ஏனெனில் ஏறக்குறைய அனைத்து உயர்



கல்வி நிறுவனங்களிலும் இது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. டோபல் பரீட்சை ஒருவர் ஒரே நாளில் எழுதி முடிக்கவும் முடியும்.

டோபல் பரீட்சை படித்தல், எழுதுதல், கவனித்தல் மற்றும் பேசுதல் என்ற 4 பிரிவுகளாக பிரிக்கப் பட்டுள்ளது.

அப்பரீட்சையை வெல்வதற்கான சில உபயோகமான ஆலோசனைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

✷ உங்களுக்கு பிடித்தமான தலைப் பில் அதிகம் கற்றல் மற்றும் கற்றதை நண்பர்களுடன் கலந்துரையாடல்

Podcasts மற்றும் பதிவு செய்யப்பட்ட விளக்கவுரையை கவனித்தல் மற்றும் உங்களுக்கு பிடித்தமான சுற்றுலா தளத்தைப் பற்றிய கட்டுரையைப் படித்தல் போன்றவை முக்கியமான அம்சங்கள். வழங்கப்பட்டுள்ள பிரதா ஐடியா, முக்கிய பொயிண்டுகள் மற்றும் மேம்பாட்டு ஐடியாக்கள் எவை என்று வரையறுக்க வேண்டும். நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்பதை உங்களின் நண்பர் மற்றும் குடும்ப உறுப்பினர் ஆகியோரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.

✷ ஆங்கிலத்தை நன்றாக பேசி பயிற்சி செய்வதற்கான ஒரு நபரை தேர்வு செய்தல்

இதுபோன்ற நபர் ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கொண்டவராக இருந்தால் நன்று. அப்படி ஒரு நபருடன் நேரடியாக பழக முடியாத பட்சத்தில் ஒன்லைன் வீடியோ சாட் மூலமாக அப்படிப்பட்ட ஒருநட்பை ஏற்படுத்திக் கொள்ளலாம். அடிக்கடி ஆங்கில மொழியை பேசிப் பழகும் போதுதான் அம்மொழியில் உங்களுக்கு நிபுணத்துவம் கிடைக்கிறது.

Vocabulary அட்டைகள்

உங்களுக்கென தனி Vocabulary அட்டைகளை உருவாக்கிக் கொண்டு நீங்கள் செல்லுமிடங்களுக்கு அவற்றையும் கொண்டு செல்லவும். இது ஒரு சிறந்த பயிற்சி முறையாகும். நீங்கள் பயணம் செய்கையிலும் வேறு வேலைகள் இல்லாத நேரத்தில் பொழுது போக்கிக் கொண்டிருக்கையிலும் இந்த அட்டைகளை பயன்படுத்தி உங்களின் வார்த்தை வள அறிவை மேம்படுத்தலாம்.

**ரீடிங் ஆலோசனைகள்.**

படிக்கும் பந்தியை திருத்தவும் மற்றும் மறு உருவாக்கம் செய்யவும். உங்களது எண்ணங்களை வகைப்படுத்துவதற்கு உதவும் வகையில் Outline களைப் பயன்படுத்தவும். உங்களின் புரிந்துணர்வுத் திறனை அதிகப்படுத்தும் பொருட்டு ரீடிங் பயிற்சியை மேற்கொள்ளவும். கணனி திரையில் படித்தல் மற்றும் கேள்விகளுக்கு பதிலளித்தல் போன்ற




செயற்பாடுகளுக்கு பழகிக் கொள்ளவும். ஏனெனில் இத்தகைய செயற்முறைகள் டோபல் தேர்வுமுறையிலும் பின்பற்றப்படுகின்றன.

**பேசுதல்**

ஒரு சிறிய கட்டுரையை செய்தித்தாள் அல்லது பத்திரிகை களிலிருந்து சத்தமாகப் படிக்கவும். அது தொடர்பான ஒரு நிமிட வாய்வழி சுருக்கத்தை வழங்கவும். கட்டுரை தொடர் பான உங்களின் கருத்தை வழங்க வும். அந்தக் கட்டுரையின் கருத் தாக்கத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா? பிரச்சினை கலந்துரையாடப்பட்டால் தீர்வை குறிப்பிடவும் உச்சரிப்பு பயிற்சியை மேற் கொள்ளவும். ஒவ் வொரு syllableயும் வெளிப்படு த்தி மெதுவாகப் பேசவும்.

**எழுதுதல்**

உங்களுக்குப் பிடித்த தொலைக் காட்சி நிகழ்ச்சியைப் பார்க்கவும். அதைப் பற்றிய ஒரு சுருக்கக் கட்டுரையை எழுதவும்.

நீங்கள் மனதில் அந்நிகழ்ச்சியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்பதை விளக்கவும் மற்றும் அந்நிகழ்ச்சியானது கடந்த நிகழ்ச்சியைவிட எவ்வாறு வேறுபட்டிருந்தது மற்றும் ஒத்துள்ளது என்பதை தெரிவிக்கவும். நீங்கள் எழுதிய கட்டுரையை வாய்ப்பிருந்தால் ஏதேனும் ஒரு குடும்ப உறுப்பினருக்கும் வழங்கலாம்.

**இலவச வசதிகள்**

✷ இத்தேர்வுக்கு தயாராகும் செயற்பாட்டில் கிடைக்கக்கூடிய பலவித இலவச அம்சங்களையும் தவறாமல் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

www.TOEFLGoAnywhere.org என்ற இணையத்தளத்திற்கு செல்லவும். அதில் மாதிரி கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கும். மேலும் http://www.ets.org/toefl/ibt/prepare/sample questions மற்றும் http://www.toeflgoanywhere.org/user/toefl-journey போன்ற இணைப்புகள் உங்களுக்கு துணைபுரியும். மேலும் www.youtube.com/user/TOEFLtv/featured என்ற தளமும் உங்களுக்கு பல விதங்களில் துணைபுரியும்.

✷ தேர்வு திகதியை திட்டமிடுதல்

தேர்வு மையத்தில் உங்களுக்கு செல்லத்தக்க புகைப்பட அடையாள அட்டை, தண்ணீர் மற்றும் சில நொறுக்குத் தீனிகளும் தேவைப்படும். உங்களுக்கு தேவையான பொருட்களை முதல்நாளே ஒரு பையில் தயாராக எடுத்து வைத்துக் கொள்ளவும். தேர்வுக்கு முந்தைய நாள் இரவு நன்றாக ஓய்வெடுக்கவும். தேர்வு நாளன்று காலை உணவு சாப்பிடுவதை தவிர்க்கக்கூடாது. பிரச்சினையற்ற உடையணிந்து செல்ல வேண்டும்.

திட்டமிட்டு செயற்பட்டால் வெற்றி உங்களுக்கே!

# பாராளுமன்ற தெரிவுக்குழுவால்

# ஒருபோதும் தீர்வு காணமுடியாது

## அரசின் இழுத்தடிப்புக்குள் கூட்டமைப்பு சிக்கக்கூடாது என்கிறார் விஜித ஹேரத்



(கொழும்பு)

**தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவால் ஒருபோதும் தீர்வு காண முடியாது. அரசின் இழுத்தடிப்பு பொறிக்குள் தமிழர்கள் சிக்கிவிடக்கூடாது என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

அமெரிக்காவினதும் இந்தியாவினதும் அழுத்தங்களுக்கு அஞ்சியே அரசாங்கம் அரசியல் தீர்வு குறித்து எதிர்க்கட்சிகளுடன் பேசி வருகின்றது.

நேர்மையாக செயற்பட விரும்புவதாயின் முதலில் நாட்டிற்கு அறிவிக்க வேண்டும். பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைத்து தீர்வுத்திட்டத்தை இழுத்தடித்து சர்வதேசத்தையும் நாட்டு மக்களையும் ஏமாற்றுவதாகவே அரசின் வியூகங்கள் அமைந்துள்ளன.

எவ்வாறாயினும் ஜே.வி.பி. தெரிவுக்குழுவில் பங்கேற்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் தனது ஏமாற்று நடிப்புக்களை தொடர்ந்தவாறே உள்ளது. அரசியல் தீர்வு விடயத்தில் மனிதாபிமானமற்ற முறையிலேயே தற்போதைய அரசாங்கம் நடந்து கொள்கின்றது.

யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களை தொட்ட நிலையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளோ, நாட்டின் பொதுவான பிரச்சினைகளோ தீர்வுகளை தொடவில்லை. மாறாக நாட்டிற்கு எதிராக பாரிய சர்வதேச அழுத்தங்களே ஏற்பட்டுள்ளன.

நாட்டிற்கு எதிராக மேற்குலக நாடுகள் மிகவும் தீவிரமாகவே செயற்படுகின்றன. குறிப்பாக இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கை விவகாரங்களில் கடும்போக்குடனே செயற்படுகின்றன.

இதன் காரணமாகவே தற்போது மீண்டும் அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக்குழு என்ற விடயத்தை முன்வைத்து அரசியல் தீர்வு குறித்து பேசுவதற்கு ஏனைய எதிர்க் கட்சிகளை அழைக்கின்றது.

கடந்த பல ஆண்டுகாலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசு முன்னெடுத்த பேச்சுக்கள், இணக்கப்பாடுகள் மற்றும் தீர்வுத் திட்ட யோசனைகள் என்பன வெறும் காலத்தை கடத்திய செயலாகவே அமைந்திருந்தன.

இந்த நிலையினை மீண்டும் தொடர இடமளிக்கக் கூடாது. குறிப்பாக தமிழ் மக்களின் அரசியல் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க ஜே.வி.பி. முழுப் பங்களிப்புடன் செயற்படும். ஆனால், இழுத்தடிப்புகளுக்கு துணை போகாது.

முதலில் அரசாங்கம் எதிர்பார்க்கும் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அதன் பின்னரே ஏனைய தரப்புக்களின் யோசனைகளை பெற்றுக் கொண்டு இறுதி நடவடிக்கைகளுக்கு செல்ல வேண்டும்.

மீண்டும் புதிய பேச்சுவார்த்தைகள் மூலம் ஆரம்பத்திலிருந்தே தமிழ் மக்களின் பிரச்சினைகளை பேசுவது என்பது வேறு நோக்கங்களை வெளிப்படுத்துகின்றது என்றார்.

(அ-2)

# தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் தொடர்கதையாகின்றது

## முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர்கள் விசனம்

(புதுக்குடியிருப்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் தொடர்வதால் அப்பகுதி மீனவர்கள் மீன்பிடிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதில் கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், அலம்பில், சிலாவத்தை, நாயாறு, முல்லைத்தீவு, வட்டுவாகல் ஆகிய பகுதி கடற் பரப்புக்களிலேயே தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கை தொடர்ந்த வண்ணம் உள்ளது.

இப்பகுதியில் 25 ஆயிரம் மீனவ குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் தென்னிலங்கை மீனவர்களால் இவர்களின் தொழில் பாதிக்கப்படுகின்றது.

தடைசெய்யப்பட்ட மீன் இனங்களை பிடிப்பதோடு தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளையும் இவர்கள் கையாண்டு வருகின்றனர்.

இதைத் தட்டிக் கேட்பதற்கு எவரும் இல்லையா என மக்கள் கேள்வி யெழுப்புகின்றனர்.

இவ் விடயம் தொடர்பாக முல்லைத்தீவு நீரியல்வள திணைக்களம், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், கடற்றொழில் அமைச்சர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ்தேவானந்தா ஆகியோருக்கு முறையிடப்பட்டுள்ளது.

எனவே, முறையிடப்பட்ட தரப்பினர் இக் கடற்றொழிலாளர்களின் நிலைமையை கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(அ-3-267)

# விபத்து சம்பவங்களில் இதுவரை 800 பேர் பலி

(கொழும்பு)

நடப்பாண்டு மே மாதம் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சுமார் 800 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் இதுவரையில் சுமார் 14 ஆயிரம் விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவில் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளே விபத்துக்களினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

பாதுகாப்பாக வாகனங்களை செலுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பில் தொடர்ச்சியாக மக்களை தெளிவுபடுத்தி வருவதாகவும் கவனயீனம், வேகமாக வாகனத்தைச் செலுத்துதல், மது போதையில் வாகனத்தைச் செலுத்துதல், பாதசாரிகள் வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மதிக்காமை போன்ற காரணிகளினால் அதிகளவில் விபத்துக்கள் இடம்பெறுவதாகத் தெரிவித்துள்ளார்.

வீதிக் கடவைகளை பயன்படுத்தாது பாதையைக் கடக்கும் பாதசாரிகள் அதிகளவில் விபத்துக்களை எதிர்நோக்குவதாகக் குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆண்டில் வாகன விபத்துக்களினால் 2 ஆயிரத்து 650 பேர் கொல்லப்பட்டதுடன் 40 ஆயிரம் வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

(அ-2

# அதிபர்களுக்கான செயலமர்வு

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய அதிபர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக முதன்மை நிலை மண்டபத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை பெறு பேறுகளில் அடைவு மட்டத்தினை அதிகரிப்பது தொடர்பாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அதிபர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

எனவே, இச்செயலமர்வில் அனைத்து பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(அ-3-266)







லயன்ஸ் கழகத்தின் 7 ஆவது ஆண்டு விழா அண்மையில் நீர்கொழும்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நல்லூர் லயன்ஸ் கழகத்தின் சேவைகளுக்காக ஐந்து சர்வதேச விருதுகள் வழங்கப்பட்டன. 306-B1 லயன்ஸ் கழகங்களுக்கிடையிலான இவ்விருதுகளை சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இயக்குநர் சுனில் வற்றவளி நல்லூர் லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் ஈ.எஸ்.பி.நாகரத்தினத்திடம் வழங்குவதையும் லயன் முக்கிய பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

மனிதன் அடையக்கூடிய உயர்ந்த பொருள் அறிவன்று. அறிவுடன் கூடிய அனுதாபமே யாகும். ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# நீங்களோ எங்களை மறக்கவில்லை நாங்களோ உங்களை மறந்து...

வன்னி இறுதிப் போர் முடிபுற்று 3 ஆண்டுகள் நிறைவாகின்றன.

போர் முடிபுற்று மூன்று ஆண்டுகள் நிறைவு என்பதற்கு அப்பால், எங்கள் உறவுகளை உடன் பிறப்புக்களை, வாழ விரும்பியவர்களை, எங்களைக் காப்பாற்றுங்கள் என்று உலகிடம் கிஞ்சித்துக் கேட்டவர்களை, எங்கள் தமிழ் மக்கள் பறிகொடுத்த அந்த பயங் கரம் நடந்து மூன்று ஆண்டுகள் என்ற கணக்கும் நாளைய தினம் என்பதை நினைவுபடுத்தாமல் இருக்க முடியாது.

வன்னியில் நடந்த கொடூரத்தின் நினைவுகளை இன்னமும் ஞாபகப்படுத்தி நிற்கும் புதுமாத்தளன் பகுதி தமிழ் மக்களுக்கு இந்த அரசு கொடுத்த அவல மரணத்திற்கான சாட்சிகளாகும்.

உருக்குலைந்த மோட்டார் சைக்கிள்கள், துவிச் சக்கர வண்டிகள், சமையலறை உபகரணங்களோடு விட்ட இடத்திலேயே உக்கிப்போகும் லொறிகள், இப்படி தமிழ் மக்களின் ஏராளமான, சொத்துக்கள் புதுமாத்தளனின் வெட்டவெளியில் காத்துக் கிடக்கின்றன.

அவற்றின் கோலத்தைப் பார்க்கும்போது என் எஜமான் என்னை மீட்பார் என்ற நம்பிக்கையில் அந்த வாகனங்கள் –உபகரணங்கள் காத்திருப்பது போலவும் தன் எஜமானின் வரவைக் காணாததால், உக்கிஉருக்குலைந்து போவதும் போன்ற நினைப்புகளே, அவற்றைக் காணும்போது ஏற்படுகின்றன.

மோட்டார் சைக்கிள்களில் ஓடித்திரிந்த என் பிள்ளை உயிரோடு இல்லை. அந்த மோட்டார் சைக்கிள் எதற்கு?

அப்படி ஒரு முடிபில் தம் பிள்ளைகளுக்காக, உருக்குலையும் பெற்றோர்களின் மனநிலை.

என்ன செய்வது! தமிழ் இனத்தைக் காப்பாற்றுவதற்கு யாருமே இல்லாத நிலையில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களைப் பறிகொடுத்து விட்டோம்.

உங்கள் இழப்பினால் எங்கள் இதயங்கள் கருகிக் கொண்டன.

அந்தக் கருக்கலில் சிறுபகுதி தப்பித்துக் கொண்டதனால்தான், உயிர் வாழுகின்றோம் என நினைக்கையில்,

எங்கள் தமிழ் மண்ணில் எங்களவர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது எஞ்சிய இதயத்தின் பகுதியும் கருகிப் போகும்போல் உள்ளது.

ஆம்! மூன்று ஆண்டுகள் முடிபதற்குள் – உங்கள் ஆத்மாக்கள் இன்னமும் சொந்த மண்ணை மறக்க விருப்பமின்றி மோட்சத்தின் அழைப்பையும் நிராகரித்து நிசப்தமாக தமிழ் மண்ணை தரிசித்துக் கொண்டிருக்கும் வேளையில்,

நாங்கள் மாறி விட்டோம் என்பதை நினைக்கும்போது மூன்று ஆண்டுகளுக்கு முன் அழுததைவிட முப்பது மடங்கு கூடுதலாக அழ வேண்டும்போல் உள்ளது.

ஓ! எனதருமை உடன்பிறப்புக்களே! நீங்கள் பட்ட வேதனையும் துடிதுடித்த அவலங்களும்தான் ஜெனிவாத் தீர்மானமாக மாறின.

அதில்கூட உரிமைகோரும் கூட்டம் இருந்தாலும், சனல் 4 தான் இப்போது எங்கள் சிவன் என்று உணர்க.

மற்றும்படி எங்களைப் பற்றி எழுதி உங்களை வேதனைப்படுத்த விரும்பவில்லை.

# கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் அரசியல்வாதிகள் தீர்மானிக்கமுடியாது

## விரிவுரையாளர் சம்மேளனம் தெரிவிப்பு

கல்வி முறை தொடர்பில் அரசியல்வாதிகள் தீர்மானங்களை எடுக்கமுடியாது என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

கல்விமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்கு நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டபோதிலும் அதன் பரிந்துரைகளை அரசியல் நோக்கங்களுக்காக நடைமுறைப்படுத்துவதாக அதன் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கல்விமுறை மற்றும் அதன் தரம் தொடர்பில் பாரிய பிரச்சினைகள் நிலவுவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் குறிப்பிடுகின்றது.

கல்விமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்கு நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டபோதிலும் அதன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் பாரிய சிக்கல் தோன்றியுள்ளதாக அதன் தலைவர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலைக்கல்விமுறையிலும் தற்போது பிரச்சினைகள் காணப்படுவதாகக் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்தார். பாடசாலைக் கல்விமுறையில் காணப்படும் பிரச்சினைகள், பல்கலைக்கழக கல்வியிலும் பிரதிபலிப்பதாக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (அ–2)

# வாகன விபத்தில் இலங்கையர் பலி

சவுதி அரேபியாவின் றியாத் நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச்சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இவ்விபத்தில் அட்டாளைச் சேனை கோணாவத்தையைச்சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான சுலைமாலெப்பை அப்துல்காதர் (வயது 52) உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கடந்த 13 வருடங்களாக சவுதிஅரேபியாவின் றியாத் நகரிலுள்ள நிறுவனமொன்றில் தொழில் புரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் விடுமுறையில் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வாடகைக்காரொன்றில் பய ணித்துக் கொண்டிருந்த போதே இவர் பயணித்த வாகனம் விபத்துக் குள்ளாகியுள்ளது. (அ–7)

# சர்வமதப்பிரியன் சர்வலோக நாயகன்

சர்வ தர்மபிரியதேவன் முழு மனித இனத்தையும் ஒரே குடையின்கீழ்க் கொண்டு வந்த சாயிசன் தமது பௌதீக உடலை நீத்து இன்று பரப்பிரம்மமாக விளங்குகின்றான். தெய்வீக திரு அவதாரமான பகவான் சத்திய சாயி பாபாவின் உண்மைத்தன்மை சத்தியம் சிவம் சுந்தரமாகும்.

சுவாமி உலகுக்களித்த மனிதகுலக் கல்வி(Educate), இலவச வைத்திய சேவை, நீர் விநியோகத்திட்டம் போன்றால் உலகத்தையே வியக்கவைக்கின்றது. அண்மையில் அமெரிக்காவிலும் பொஸ்ரன் சாயி நிலையத்தில் சகோதரர் பாயிஸ் என்னும் இஸ்லாமிய சாயி பக்தர் (இவர் சுவாமியின் பாலவிகாஸ் திட்டத்தை உலகெங்கும் பரப்பி வருபவர்) சுவாமியைப்பற்றிக் கூறியவை, சாயி எல்லா மனிதர்களையும் இணைப்பவர் (அல்–ஜமீன்), எல்லாவற்றையும் விட உயர்ந்தவர் (அல் –கபிரு). இப்படியாக உலகத்தவருக்கு அவரவருக்கு அதுவதுவாய் விளங்குகின்ற தெய்வம்.

சுவாமியின் மகா சமாதியின் பின் சுவாமியின் பிரசன்னம் அதிகமாக உணரப்படுகிறது. பல்வேறு நாடுகளிலும் நிகழும் அற்புதங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன.

சுவாமி அடிக்கடி கூறுவார், சத்தியம் என்னுடைய பிரசாரம். தர்மம் என்னுடைய ஆதாரம். சாந்தி என்னுடைய சுபாவம், பிரேமை என்னுடைய சுவரூபம். இவற்றில் ஒன்றைக் கடைப்பிடியுங்கள். நீங்கள் என்னுடையவராவீர்கள். நான் உங்களுடையவனாவேன். சுவாமி எல்லோரிடமும் கேட்பது, ஆத்ம விசுவாசத்துடன் சேவை செய்யுங்கள். அதற்கு நீதி, நேர்மை, சத்தியத்தை ஆதாரமாகக் கொள்ளுங்கள்.


பூரண அவதாரமான 'சத்தியசாயி பகவான் எப்போதும் தனது கைகளை உயர்த்தி அபயஸ்தம் என்றே காட்டுவார். ஆனால் சுவாமியின் இறுதி தரிசனத்தின்போது நாற்புறமும் இரண்டு கைகளையும் கூப்பி வணக்கம் செலுத்துவது போலக்காட்டினார்.

மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல அம்புலன்ஸ் சுவாமியின் அனுமதியுடன் கொண்டு வரப்பட்டபோது தமது மருமகன் முறையான ரட்ணாகரைப் பார்த்து பெரிதாக புன்முறுவல் செய்தார்.



சுவாமியுடன் பல வருடங்கள் நெருக்கமாக இருந்த மொழிபெயர்ப்பாளர் பேராசிரியர் அனில்குமார் கூறியது போல சுவாமி, நான் 96 வயதுவரை இவ்வுடலில் இருப்பேன் என்று கூறினாலும் நான் விரும்பினால் 106 வயதுவரையும் இருப்பேன். விரும்பினால் இப்போதும் இவ்வுடலை தூக்கியெறிந்துவிடுவேன். காலதீதனான சுவாமிகள் சித்திரை 24, 2011 இல் தமது பௌதீக உடலை நீத்தார்.

மயில்வாகனம் சிவயோகசுந்தரம்
நல்லூரான் சிவா,
பொஸ்ரன்,
அமெரிக்கா.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பால் காய்ச்சும் வீட்டில் மாவிலை, தோரணங்கள் கட்டுவது எதற்கு?

புதுமனை கட்டிமுடித்து அதற்குப்புகுவிழா நடத்தும்போது மாவிலைத்தோரணம் கட்டுவது வழக்கம். இதன் பயன்கள் தெரியாவிட்டாலும் இவ்வாறு செய்வது பெரும்பான்மையான மக்கள் கருத்தாக இருந்து வருகின்றது.

பால் காய்ப்புச் சடங்குகள் எவையெல்லாம் என்பது அநேகருக்கும் தெரியும். புதிதாய்க்கட்டிய வீட்டில் நடுவில் அமைந்திருக்கும் அறையில் இதற்காக வைக்கப்பட்ட புதிய அடுப்பில் வீட்டுத்தலைவி ஒரு புதுப்பானையில் பாலை ஊற்றிச்சூடாக்குகின்றாள். பால் கொதித்துப் பொங்கி நிறைந்து கவிந்தொழுக வேண்டும் என்பது நம்பிக்கை. இதைக்காணும் போது வீட்டுத் தலைவருக்கும் வந்து சேர்ந்திருப்போருக்கும் ஒரே கொண்டாட்டம்தானே! பரிசுத்தமானதால் பாலைச்சூடாக்கி புதுமனைக்குள் செல்கின்றோம்.

இதற்குப் பின்னால் ஆழமான ஆன்மீக உண்மைகள் இருப்பதாக ஆசாரியார் கூறுகின்றனர். எப்படியானாலும் பால் காய்ச்சும் வீட்டுக்குள் செல்லும்போது நம்மை முதலாவது வரவேற்பது வாசலில் மாவிலைத் தோரணங்கள். ஆனாலும் இதை யாரும் அவ்வளவு பொருட்டாக எடுப்பதில்லை.

மாவிலைத்தோரணத்துக்குப் பின்னாலுள்ள உண்மைகளைப் பண்டைக்காலத்திலேயே அறிந்திருந்ததனால் இந்த வழக்கம் இன்றும் உள்ளன. பால்காய்ப்பு என்றல்ல, எல்லா முக்கிய சடங்கிற்கும் சிலர் மாவிலையைக் கனப்படுத்துவதுண்டு.

பால்காய்ச்சும் சடங்கிற்காக அநேகம் மக்கள் அந்தவீட்டில் வந்து சேருவதுண்டு. அப்படி அதிகம்பேர் வந்து சேருமிடத்தில் வாயு அசுத்தமாவது இயற்கை. இந்த அசுத்தவாயுவைச் சுத்தம்செய்ய மாவிலைக்கு இயலுமாம். மாவிலையை வாசலிலும் வீட்டிற்குள்ளும் கட்டுவது இதற்காகவே. இதற்குப் பதிலாக மாவிலை வடிவில் பிளாஸ்டிக் இலைகள் கட்டுவதுமுண்டு. இதனால் பயனில்லை என்பது மட்டுமல்ல தீமையுண்டு என்பதே உண்மை.

மாவிலைக்கு நோயணுக்களின் சக்தியை அழிக்க இயலும் என்றறிந்திருந்த முன்னோர்கள் மாவிலையால் பல்துலக்குவதுண்டு.

கிணற்றைச் சுத்தம் செய்ய இறங்கும் போது கிணற்றிலுள்ள அசுத்தவாயுவில் சிக்கி மூர்ச்சையாகும் நிகழ்வுகள் நாம் அறிந்துள்ளோம். ஆழமான கிணற்றில் இறங்குவதற்கு முன் மாமரத்தின் ஒரு கிளையை ஒடித்து கட்டியிறக்கி சுழற்றிய பின் வெளியில் எடுத்தால் சுத்தவாயு கிடைக்கும் என்று நம் பண்டைய மக்கள் சொல்லக் கேட்டதுண்டு.

# மீள்குடியேற்றம் என்ற வார்த்தைக்குப் பின்னால்

# உள்ள உழைப்பு மிக மிகக்கடினமானது

## சந்திரகுமார் எம்.பி. கூறுகின்றார்

( கொழும்பு )

**மீள்குடியேற்றம் என்ற வார்த்தையின் பின்னால் உள்ள உழைப்பு என்பது மிக கடினமானது. அதிலும் இந்த பிரதேசங்களின் மீள்குடியேற்றம் பெரும் சவால்கள் நிறைந்தது என பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவின் இத்தாவில், வேம்பொடு கேணி கிராமங்களின் முதற்கட்ட ஒரு பகுதி மீள்குடியேற்ற ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு நேற்றுமுன்தினம் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெரும் யுத்த களமாக அதிகளவு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசத்தில் நாம் யாரும் எதிர்பார்க்காத வகையில் விரைவான மீள்குடியேற்றத்திற்கு இன்று வழி சமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இத்தாவில், வேம்பொடு கேணி மக்களின் நீண்ட கால கனவு, விருப்பம், எதிர்பார்ப்பு இன்று நிறைவேறியுள்ளது.

சொந்த ஊருக்கு திரும்ப வேண்டும் என்ற மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டியவை. தொடர்ந்தும் மக்கள் , நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் வசிக்க முடியாது.

அவர்கள் சொந்த இடங்களில் முன்னர் வாழ்ந்தது போன்று வாழ வேண்டும். அதற்கான சூழலை ஏற்படுத்தவேண்டியது எம் அனைவரினதும் மிகப்பெரிய பொறுப்பு.

அரசும் இடம்பெயர்ந்த மக்களை சொந்த இடங்களில் மீள் குடியமர்த்துவதற்கு எல்லா வகையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு எம்முடன் சேர்ந்து உழைப்பதற்கு அதிகாரிகள் அனைவரும் தயாராகவே உள்ளனர்.

எனவே இதில் மக்களும் தங்களுடைய பூரண ஒத்துழைப்பினை வழங்கும் போது அந்த மாற்றத்தினை விரைவாக ஏற்படுத்த வேண்டும்.

மேலும் இதேபோன்றொரு நிலையில் தான் கிளாலி மீள்குடியேற்றம் இடம்பெற்றது. ஆனால் இன்று அந்த கிராமத்தின் நிலைமை மாற்றம் அடைந்துள்ளது.

அங்கு ஓரளவுக்கு உட்கட்டுமானங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வீட்டுத்திட்டம் உள்ளிட்ட பல்வேறு தேவைகள் படிப்படியாக பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது.

எனவே இதேபோன்ற நிலைமை இந்த பிர தேசங்களிலும் ஏற்படுத்தப்படும். கண்ணி வெடி மற்றும் வெடி பொருட்கள் தொடர்பில் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் மக்களிடம் அதிக விழிப்புணர்வு மிகவும் அவசியமானது என்றார். (அ-2)

# கிராம சேவையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

கிராம சேவையாளர் பதவிக்கு புதியவர்களை நியமிக்கும் போது வயது மட்டங்களை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளை கவனத்தில் கொண்டே கிராம சேவையாளர்களின் வயது மட்டங்களை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

தற்போது கிராம சேவையாளர் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான வயதெல்லை 30 ஆகும். அதனை 35 வயதாக அதிகரிப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதேவேளை எதிர்வரும் மாதம் கிராம சேவையாளர் 2 ஆயிரம் மற்றும் 2 ஆயிரத்து 500 என்ற அடிப்படையில் சேவைக்காக இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

# சவுதி, ஓமானில் இருந்து எண்ணெய் இறக்குமதி

## அமைச்சர் சுசில் தெரிவிப்பு

அமெரிக்காவினால் ஈரானுக்கு விதிக்கப்படும் தடையால் மசகு எண்ணெய் இறக்குமதி நிறுத்தப்படும் போது அதற்கு பதிலாக ஓமான் மற்றும் சவுதி அரேபியாவில் இருந்து மசகு எண்ணெயை இறக்குமதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்தத் தகவலை வெளியிட்டார்.

தற்போது ஈரானில் இருந்து 38 வீத மசகு எண்ணெய் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது. முன்னதாக இலங்கை ஈரானிடம் இருந்து 93 வீத மசகு எண்ணெய் இறக்குமதியில் தங்கியிருந்தது.

இந்த நிலையில் ஈரானுக்கு அமெரிக்கா விதிக்கும் தடையின் போது இலங்கைக்கு ஏதாவது நிவாரணம் கிடைக்குமா என்று இலங்கை அமெரிக்காவிடம் எதிர்பார்த்திருப்பதாகவும் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடந்த வருடத்தில் இறக்குமதிக்ளுக்காக 4.63 பில்லியன் டொலர்களை செலவிட்டது. இதில் 1.7 பில்லியன் டொலர்கள் மசகு எண்ணெய்க்காக செலவிடப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)



(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கில் நான்கு மாதங்களேயான தென்னங்கன்றிலிருந்து குரும்பை வந்த அதிசயம் இடம்பெற்றுள்ளது.

இருபாலை கிழக்கு வி.எச்.லேனிலுள்ள கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க்கலவன் படசாலைக்கு முன்பாகவுள்ள குடியிருப்பிலுள்ள முருகன் நவரத்தினம் என்பவரது வீட்டிலேயே இந்த அதிசயம் இடம்பெற்றுள்ளது. (அ-6)

- தபால் மூலம் -

ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

May 2012 to October 2012

23

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2012

(சி/014)

# இலங்கை பிரச்சினையில் தி.மு.க.வின் நிலைப்பாடு என்றுமே மாறாது

## கலைஞர் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கைப் பிரச்சினையில் தி.மு.க.வின் அணுகுமுறை மாறியுள்ளதே தவிர அதன் நிலைப்பாடு என்றும் ஒன்றுதான் என திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளியாகும் ஆங்கிலப்பத்திரிகை ஒன்று கேட்ட கேள்விக்கு மு. கருணாநிதி அளித்த பதில் வருமாறு,

இலங்கைப்பிரச்சினையில்தனித் தமிழீழம் என்ற உங்கள் கோரிக்கைக்கு கடுமையான விமர்சனங்கள் கிளம்பியிருக்கின்றன. ஆட்சியில் இருக்கும்போது தி.மு.க. ஒரு நிலைப்பாடு எடுப்பதாகவும் இல்லாதபோது ஒரு நிலைப்பாடு எடுப்பதாகவும் வரும் விமர்சனங்கள் பற்றி என்று கேட்டபோது அவர் பதிலளிக்கையில்,

இலங்கைத்தமிழர் பிரச்சினையில் கழகம் ஆட்சியில் இருக்கும் போதும் சரி இல்லாதபோதும் சரி ஒரே நிலைப்பாடுதான். ஆனால் அணுகுமுறையில் வேண்டுமானால் மாற்றங்கள் இருக்கலாம். ஆனால் தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கிறோம் எதிர்க்கட்சியாக இருக்கின்றோம் என்றெல்லாம் என்றும் பார்த்ததில்லை.

இலங்கைத்தமிழர்களுக்கு விடிவு காலம் ஏற்பட வேண்டு மென்று தான் பாடுபட்டு வந்திருக்கின்றது. என்றைக்கும் ஒரே நிலையிலே தான் இருக்கிறது.

டெசோ அமைப்பை மீண்டும் புதுப்பிக்க என்ன காரணங்கள் எனக்கேட்டபோது இலங்கைத் தமிழர்களின் துயரங்கள் முடியாமல் தொடர்கதையாக நீண்டு போய்க் கொண்டிருக்கிறது.

இலங்கை ஜனாதிபதி கொடுத்த வாக்குறுதிகளை பலமுறை மீறி விட்டார். உலகம் முழுவதிலுமுள்ள ஈழத் தமிழர்கள் தங்களுக்கு விடிவு காலமே இல்லையா என்றென்றும் வேதனையில் ஆழ்ந்துள்ளார்கள்.

எனவே இலங்கையிலேயே தனித்தமிழீழம் அமைய மீண்டும் டெசோ அமைப்பினை உருவாக்கிட வேண்டும் என்று எண்ணி செயற்படத் தொடங்கியுள்ளேன் என்றும் கருணாநிதி கூறியுள்ளார். (அ-2)


### கணனி டிப்ளோமா பரீட்சையில் நான்கு பேருக்கு பதக்கம்

சர்வோதயா மிஷனால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கணனி டிப்ளோமா கற்கை நெறிக்கான பரீட்சையில் சித்தங்கேணி ஸ்கைலைன் ITC நிறுவனத்தின் 4 மாணவர்கள் பதக்கம் பெறவுள்ளனர்.

மேற்படி இந்நிகழ்வானது நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு மகரகம தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தில் நடைபெறவுள்ளது. (அ-7)

# தேசிய மட்டப் போட்டியில் வடக்கு மாணவர்கள் வெற்றி


ஆர்.நிமலேந்திரா


ஆர்.தர்சிகா


எம்.பாபுஜி

2012 ஆம் ஆண்டுக்கான தேசிய அளவில் கனிஷ்ட மட்ட தடகளப் போட்டிகள் கடந்த வாரம் தியகம மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இதில் வட மாகாணத்தைச் சேர்ந்த 3 மாணவர்கள் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களை பெற்றுள்ளனர்.

20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் குண்டெறிதலில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையைச் சேர்ந்த ஆர்.நிமலேந்திரா வெள்ளிப் பதக்கத்தையும்,

18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் தட்டெறிதலில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவி ஆர்.தர்சிகா வெண்கலப் பதக்கத்தையும்,

16 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 3000 மீற்றர் நடைப்போட்டியில் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலய மாணவி எம்.பாபுஜி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

# கொல்கத்தா மும்பையை வீழ்த்தியது

ஐ.பி.எல்லின் 65ஆவது லீக் ஆட்டம் நேற்றிரவு மும்பையில் நடைபெற்றது.

இதில் ஹர்பஜன் சிங் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் பந்து வீசுவதாக அறிவித்தது.


இதனையடுத்து கொல்கத்தா அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக காம்பீரும் மக்கலமும் களமிறங்கினர்.

மக்கலம் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் முடிபில் 7 விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது கொல்கத்தா அணி.

இதனையடுத்து 141 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற சுலபமான இலக்குடன் பதிலெடுத்தாடக் களமிறங்கியது மும்பை அணி.

ஆனால் கொல்கத்தாவின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 19.1 ஓவரில் சகல விக்கெட்டையும் இழந்து 108 ஓட்டங்களுக்குள் சுருண்டது மும்பை அணி.



இதனால் 32 ஓட்டங்களால் கொல்கத்தா அணி வெற்றி பெற்றதுடன் பிளேஒப் சுற்றுக்கும் தகுதி பெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக நரேன் தேர்வானார்.

# அரையிறுதிக்குச் செல்லும் அணிகள் எவை?

கடந்த 4 சீசனில் இல்லாத அளவிற்கு, இந்த ஐ.பி.எல் சீசனில் பிளேஒப் சுற்றுக்கு கடும் போட்டி நிலவுகிறது. இதுவரை டெல்லி மற்றும் கொல்கத்தா அணிகள் பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன. மற்ற எந்த அணிகளுமே இன்னும் பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெறவில்லை.

தவிர டெக்கான் சார்ஜர்ஸ் மற்றும் புனே வாரியர்ஸ் அணிகள் பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெறும் வாய்ப்பை ஏற்கெனவே இழந்து விட்டன. இந்நிலையில்,மற்ற அணிகள் பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெற என்னசெய்ய வேண்டும் என்பது குறித்து ஒரு பார்வை:

**சென்னை சுப்பர் கிங்ஸ் அணி**

சென்னை அணியை பொறுத்தவரை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியுடன் நடக்கும் கடைசி போட்டியில் கட்டாயம் வெற்றி பெற வேண்டும். அவ்வாறு வெற்றி பெற்றால் சென்னை அணி 19 புள்ளிகளுடன் பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெற்றுவிடும்.

பஞ்சாப் அணியுடன் நடக்கும் கடைசி போட்டியில் தோல்வியடையும் பட்சத்தில் பஞ்சாப்,பெங்களூர் மற்றும் ராஜஸ்தான் போன்ற அணிகள் தங்களுக்கு மீதமுள்ள எல்லா போட்டிகளிலும் வெற்றி பெற்றாலும் சென்னை அணி, பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெறாது.

**ராஜஸ்தான் றோயல்ஸ்**

ராஜஸ்தான் அணியை பொறுத்த வரை தனக்கு எஞ்சியுள்ள 2 போட்டிகளிலும் கட்டாயம் வெற்றி பெற வேண்டும். அவ்வாறு வெற்றி பெற்றாலும் மும்பை, கொல்கத்தா, சென்னை, பஞ்சாப் மற்றும் பெங்களூர் அணிகளின் போட்டி முடிபு குறித்து ராஜஸ்தான் றோயல்ஸ் பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெறுவது குறித்து முடிபு செய்யப்படும்.

ராஜஸ்தான் அணி இரண்டு ஆட்டங்களிலும் தோல்வி அடைந்தாலோ அல்லது சென்னை மற்றும் பெங்களூர் அணிகள் தங்களுக்கு எஞ்சியுள்ள ஆட்டங்களில் வெற்றி பெற்றாலும் ராஜஸ்தான் அணி பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெறாது.

**மும்பை இந்தியன்ஸ்**

மும்பை அணியை பொறுத்த வரை




தனக்கு எஞ்சியுள்ள ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றால் பிளேஆப் சுற்றுக்கு தகுதி பெறும். அதில் தோல்வி பெறும் பட்சத்தில், சென்னை, பெங்களூர் மற்றும் ராஜஸ்தான் போன்ற அணிகள் தங்களுக்கு எஞ்சியுள்ள ஆட்டங்களில் வெற்றி பெற்றால் மும்பை இந்தியன்ஸ் பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெறாது.

**பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்**

பெங்களூர் அணியை பொறுத்தவரை எஞ்சியுள்ள 2 ஆட்டங்களிலும் கட்டாயம் வெற்றி பெற்றால் மாத்திரமே பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெறும். 2ஆட்டங்களில் ஒன்றில் தோல்வியடைந்தாலும் பிளே ஒப் சுற்றுக்கு தகுதி பெறாது.

**கிங்ஸ் லெவன் பஞ்சாப்**

பஞ்சாப் அணியை பொறுத்த வரையில் எஞ்சியுள்ள 2ஆட்டங்களிலும்கட்டாயம்வெற்றி பெற வேண்டும். அதே சமயம் பெங்களூர் மற்றும் ராஜஸ்தான் அணிகள் தங்களுக்கு எஞ்சியுள்ள 2 ஆட்டங்களில் ஒரு ஆட்டத்தில் தோல்வி பெற வேண்டும். அப்படி நடந்தால் பஞ்சாப் அணி பிளே ஒப் சுற்றுக்கு தகுதி பெறும்.

பஞ்சாப் அணியைப் பொறுத்தவரை தனக்கு எஞ்சியுள்ள 2 ஆட்டங்களில் ஒரு ஆட்டத்தில் தோல்வி அடைந்தாலும் பிளேஒப் சுற்றுக்கு தகுதி பெறாது.

**இன்றைய ஐ.பி.எல். போட்டிகள்:**
மாலை 4 மணிக்கு தர்மசாலாவில் நடைபெறும் போட்டியில் சென்னை அணி எதிர் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும், இரவு 8 மணிக்கு டில்லியில் நடைபெறும் போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதுகின்றன.

# கங்குலியோடு என்னை ஒப்பிடாதீர் -ஷாருகான்




ஒவ்வொரு முறையும் கொல்கத்தா வரும் போதும் கங்குலி குறித்து என்னிடம் கேட்பது வழக்கமாகி வருகிறது. இது முகவும் எரிச்சலடையச் செய்கிறது என்று பாலிவுட் நடிகர் ஷாருக்கான் கூறியுள்ளார்.

ரசிகர்கள் மனநிலை மாற வேண்டும், வளருங்கள், இது ஒரு விளையாட்டு, அதனால் விளையாட்டை விளையாட்டாக பார்ப்போம். நாம் எப்போதும் கிங்குகளையும் கான்களையும் பற்றியே பேசுகிறோம்.

நான் இதனை மரியாதையுடனும், அன்புடனும் கூறுகிறேன் என்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் போட்டி முடிந்தவுடன் விருந்தில் கலந்து கொண்ட கொல்கத்தா அணியின் உரிமையாளரான ஷாருக்கான் வருத்தப்பட்டுள்ளார்.

3 ஆண்டு கால கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ஆட்டத்திற்குப் பிறகு கங்குலியை அந்த அணி நீக்கியது. இது பெரும் சர்ச்சையை பெங்கால் பத்திரிகையாளர்களிடையே கிளப்பியது.

இது உண்மையில் எனக்கு மட்டுமல்ல தாதாவிற்கும் ஒரு தர்மசங்கடமே. இதனை நாம் விட்டு விடுவோம். ஒவ்வொரு முறையும் கொல்கத்தா வரும் போதும் சில பல தலைப்புச் செய்திகளுக்காகவும் பரபரப்புக்காகவும் இதைச் செய்வது அநியாயமானது. கங்குலியின் சாதனைகளை புகழ்ந்து பேசுவதை விடுத்து இதுபோன்ற சில்லறை ஒப்பு நோக்குதல்களெல்லாம் செய்து அவரை சிறுமைப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுக்கு இடையே பெரும் நட்பு உள்ளது என்றும், சொந்தமாகவும் சரி கிரிக்கெட், வணிகம் என்று நிறைய உள்ளது என்றும் நான் தாதாவின் விசிறி எனவும் ஷாருக்கான் கூறியுள்ளார்.

# வெற்றியை தவறவிட்ட ஆனந்த்

உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியின் 3-வது ஆட்டம் விஸ்வநாதன் ஆனந்த், கெல்ஃபாண்ட் இடையே அபாரமான போராட்டமாக மாறி கடைசியில் சமன் ஆனது. ஆட்டத்தின் ஒருநேரத்தில் ஒரு நகர்த்தலுக்கு அதிக நேரம் எடுத்துக்கொண்ட ஆனந்த் வெற்றிக்கான நகர்த்தல் வாய்ப்பு இருந்தும் கவனிக்காமல் விட்டுவிட்டார். சுமார் 37 நகர்த்தல்கள் அதாவது 4 மணி நேர ஆட்டத்திற்கு பிறகு சமண் ஆனது.

கெல்ஃபாண்ட் செஸ் ஆட்டத்தின் தொடக்கத்தில் மிகவும் புகழ்பெற்ற பாதுகாப்பு தடுப்பரணான கிரண்ஃபெல்ட் டிஃபன்ஸ் அதாவது ராணியின் அருகில் இருக்கும் பான்களைக் கொண்டு தடுப்பரண் மேற் கொள்வது என்ற உத்தியைக் கையாண்டார் கெல்ஃபாண்ட், ஆனால் ஆனந்த் அவருக்கே அதிர்ச்சி தரும் நகர்த்தல் ஒன்றை மேற்கொண்டு கெல்ஃபாண்டை அசத்த நினைத்தார்.

ஆட்டத்தின் 12வது நகர்த்தலில் கெல்ஃபாண்ட் பகுதி ராஜா பக்கத்திலிருந்து ஆனந் பெரிய தாக்குதல் ஒன்றை நிகழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் கெல்ஃபாண்ட் தயாரிப்புடன் இருந்தார். தனது முதல் ஒவ்வொரு 15 நகர்த்தல்களுக்கும் 35 வினாடிகளே எடுத்துக் கொண்டார்.

24-வது நகர்த்தலில் கெல்ஃபாண்ட வாய்ப்பை தவறவிட ஆனந்த் மெல்ல தனது கட்டுப்பாட்டின் கீழ் ஆட்டத்தைக் கொண்டு வந்தார்.

அவரது பான்-ஐ வெட்ட நான் முயற்சி செய்தேன் ஆனால் அதே வேளையில் அவரது சில நகர்த்தல்களை நான் குறைவாக மதிப்பிட்டேன் என்றார் கெல்ஃபாண்ட்.

34-வது நகர்த்தலின்போது ஒரு நகர்த்தலுக்கு 3 நிமிடங்கள் எடுத்துக் கொண்டதால் டென்ஷன் அதிகமானது. இதனால் வெற்றிக்கான வாய்ப்பு ஒன்று சி-4 கட்டத்தில் இருந்த யானை மூலம் ஏற்பட்டிருக்கும் என்பதை ஆனந்த் மிகவும் தாமதமாகவே உணர்ந்தார்.

அதன் பிறகு இருவரும் 37வது நகர்த்தல் முடிந்ததும் போட்டியை சமன் செய்ய ஒப்புக் கொண்டனர். 12 ஆட்ட போட்டியான இந்த உலக செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் இருவரும் தற்போது 1.5-1.5 என்ற புள்ளிகளில் உள்ளனர்.

# தீர்வொன்றை பெற...

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தைகள் முடங்கிப்போயுள்ள நிலையில், இலங்கையின் அரசியல் நெருக்கடிக்கு தேசிய ரீதியிலான தீர்வொன்றை பெறுவதற்கு அடிப்படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தற்போது முனைப்புகள் காட்டி வருவதாக அவர் கூறியுள்ளார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டனை சந்திப்பதற்காக அங்கு விஜயம் செய்துள்ள பீரிஸ், வுட்ரோ வில்சன் சர்வதேச மத்திய நிலையத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் பயங்கரவாதம் அழிக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ளன. சிறந்த ஒரு வாய்ப்பை நாங்களே தற்போது ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசியல் தீர்வு அவசியம் என்பதையும், அது உள்நாட்டுத் தீர்வாக இருக்க வேண்டும் என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம்.

இத்தீர்வானது வெளிநாட்டுக் கொடுப்பனவாகவோ, வெளிநாட்டுத் தயாரிப்பாகவோ இருக்க முடியாது. அது வரலாற்றுத் தேவையை பூர்த்தி செய்ய நம்பிக்கை அளிப்பதாக இருக்காது. உள்நாட்டில் இருந்து கொண்டு வரப்படும் தீர்வு அனைவரும் விரும்பக் கூடியதாக இருக்கும்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அர்த்தமுள்ள முறையில் அதனை செயற்படுத்த விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களில் 98 சதவீதமான மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வாழ்வாதார வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களும் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இனங்களுக்கு இடையிலான உறவை வலுப்படுத்த மொழிப் பயிற்சிகளை வழங்கி வருகிறோம். வடக்கில் மீன்பிடி மற்றும் விவசாயம் ஆகிய துறைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் பொருளாதார வளர்ச்சியிலும் கவனம் செலுத்தி வருகின்றோம். 2011 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கில் 22 சதவீத பொருளாதார வளர்ச்சியும், முழு இலங்கையில் 8.3 சதவீத பொருளாதார வளர்ச்சியும் பதிவாகியுள்ளது என பீரிஸ் தனது உரையில் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் அமெரிக்க செனட் சபை உறுப்பினர் ஜோன் மிக்கெய்னை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

அத்துடன், செனட்டர் ஜிம் வெப்பையும், ஜேம்ஸ் இன்ஹோப்பையும் இக்குழுவினர் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (எ-11)

# போராளிகள் விடுதலை...

அவுஸ்திரேலிய ஆகிய நாடுகளின் தூதுவர்களின் முன்னிலையில் ஜனாதிபதியால் முன்னாள் போராளிகள் 1800 பேர் விடுவிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட தமது பிள்ளைகள் இன்றுவரை தம்மிடம் வந்து சேரவில்லை என்றும் ஊடகங்கள் மூலமாகவே அதுபற்றி அறிந்து கொள்ள முடிந்ததாகவும் முன்னாள் போராளிகளின் பெற்றோர் தம்மிடம் முறைப்பாடு செய்திருப்பதாக மனோ கணேசன் தெரிவித்தார்.

பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவதாகக் கூறி ஊடகங்களில் வெளியிடப்பட்ட நிழற்படமொன்றைக் காட்டிய தாயொருவர், குறித்த படத்திலிருப்பவர் தனது மகன்தான் என்று அடையாளம் காட்டியதாகவும் அவர் தன்னிடம் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை என்று முறையிட்டதாகவும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் சுட்டிக்காட்டுகிறார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து பார்த்தபோதே, முன்னாள் போராளிகள் பற்றிய அரசின் பிரசாரங்களிலுள்ள ஏமாற்று வேலை தெரியவந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் முன்னாள் போராளிகளை விடுவிப்பதாக சர்வதேசத்துக்கு கூறுகிறது. அதற்கு சாட்சியாக வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்தக் காட்டுகிறது. ஆனால் அது உண்மையில் பித்தலாட்டம் என்று மனோ கணேசன் கூறினார்.

முன்னாள் போராளிகளை புனர்வாழ்வு திட்டத்துக்குட்படுத்தி விடுதலை செய்து வருவதாக அரசு கூறுகிறது.

முல்லைத்தீவு அலம்பில், கிளிநொச்சி கனகபுரம் மற்றும் பரந்தன் முரசுமோட்டை ஆகிய மூன்று கிராமங்களைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் தொடர்பான தகவல்களே தமக்கு கிடைத்துள்ளதாகவும், அரசின் குறித்த நிகழ்வில் காண்பிக்கப்பட்ட சுமார் ஆயிரத்து 800 பேர் விடுதலை தொடர்பிலும் தமக்கு சந்தேகம் இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

2008 ஆண்டில் காணால்போன தமது பிள்ளைகள் பற்றிய தகவல்கள் குறித்த நிழற்படத்தை பார்த்த பின்னரே தமக்கு தெரிய வந்திருப்பதாக பெற்றோர் முறையிட்டதாகவும் காணாமல் போனோர் தொடர்பான செயற்பாட்டு அமைப்பான மக்கள் கண்காணிப்பு குழுவின் தலைவர் மனோ கணேசன் கூறினார்.

குறித்த பெற்றோர் கடந்த காலங்களில் தமது பிள்ளைகளைத் தேடி கொழும்புக்கு வந்து அரச படைகளின் புலனாய்வுப் பிரிவுகள், பொலிஸார், பாதுகாப்பு அமைச்சு மற்றும் பூசா தடுப்பு முகாம் என பல இடங்களிலும் சென்று முறையிட்டிருந்தும் எவ்வித பலனும் கிடைக்காதபட்சத்தில் தான் தன்னிடம் முறைப்பாடு செய்திருப்பதாகவும் மனோ கணேசன் தெரிவித்தார்.

இலங்கையில் போருக்கு பின்னரான சூழ்நிலையில் அரசிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களை அவர்களின் குடும்பத்தாரிடம் ஒப்படைத்து வருவதாக அரசு தொடர்ந்து பிரசாரம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# கழுத்தில் இலக்கத்...

இந்த நடவடிக்கையினை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து விலகி புனர்வாழ்வு பெறாதவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவேண்டும் என்றால் அதற்கென்று நடைமுறைகள் உள்ளன. மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள் ஊடாக அது தொடர்பில் நடைமுறைகள் மேற்கொள்ள முடியும்.

விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து விலகி இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியோர் பலர் இன்று தமது குடும்பத்தினருடன் எதுவித அச்சமும் இன்றி சுதந்திரமாக வாழ்ந்துவரும் நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை அவர்களை அச்சமடையச்செய்துள்ளது.

சிவில் உடையில் வருவோரால் அவர்களின் குடும்ப விபரம் மற்றும் அவர்களின் முழுவிபரங்கள் திரட்டப்படுவதுடன் அவர்களின் கழுத்துக்களில் இலக்கத்தகடு தொங்கவிடப்பட்டு புகைப்படமும் பிடிக்கப்படுகின்றன.

அண்மையில் இது தொடர்பில் எமது தலைவர் இரா.சம்பந்தன் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் கதைத்து திருமலையில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்ததுடன் இவ்வாறான நடவடிக்கைகள் ஏனைய மாவட்டங்களில் இனி மேற்கொள்ளப்படாது என்ற உறுதிமொழியும் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் அந்த உறுதிமொழிகள் மறக்கப்பட்டு தற்போதூ மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் பலத்த சந்தேகத்தை தமிழ் மக்கள் மனதில் தோற்றுவித்துள்ளன.

எனவே இவ்வாறான நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட்டு தமிழ் மக்களின் அச்ச நிலையை போக்க அரசாங்கமும் படைத்தரப்பும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# நிபந்தனை...

தினங்களில் தீர்த்துக்கொள்ள முடியும் என நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய ஜனாதிபதி எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை எனவும் அனைத்தும் பேச்சுவார்த்தையின் விளைவே எனவும் டிரான் அலஸ் தெரிவித்தார். (எ-11)

# புலிச்சந்தே...

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தாக ரகசிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு இராணுவத் தலைமையகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் சரத் பொன்சேகா படுகாயமடைந்ததுடன், 11 பேர் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# தனித் தமிழீழம் அமை...

வெளியீட்டில் உரையாற்றிய போதே அவர் இதனக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

அடுத்து இலங்கைத் தமிழர்களுக்காக, ஈழத்தமிழர்களுக்காக என்ன செய்யப்போகிறோம் என்பதை இந்த நிகழ்ச்சியை ஒரு வாய்ப்பாக வைத்துக்கொண்டு வீரமணி இடத்திலும் சுப.வீரபாண்டியன் இடத்திலும் உரையாடினேன்.

அவர்கள் ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் முடித்துவிட்டு, எனக்கும் ஒரு தோதான திகதியில் சென்னையில் அமர்ந்து பேசி தமிழீழ, தனி ஈழ விடுதலைக்கான, டெசோ அமைப்பு மாநாட்டை சென்னையில் விரைவில் நடத்தவிருக்கின்றோம்.

எல்லோரும் தமிழருடைய உரிமைக்காக தமிழ் நாட்டிலுள்ள தமிழர்கள் மாத்திரமல்ல, ஈழத்திலுள்ள தமிழர்களுக்காகவும் பணியாற்றுகின்ற அந்த செயலில் ஈடுபடவேண்டும் என்பது இன்றையதினம் என்னுடையு கோரிக்கையாகும். விரைவில் தனித்தமிழீழம் ஏற்பட நாம் அனைவரும் ஒன்று கூடுவோம்.

தி.மு.க.சார்பில் ஆட்சியமைக்கப்பட்டு நான் முதலமைச்சரானதும் மரியாதை நிமித்தமாக ராஜீவ் காந்தியை சந்தித்தேன். இப்போது ஒரு ரகசியத்தை நான் உங்களிடம் சொல்கிறேன்.

என்னிடம் ராஜிவ்காந்தி, பிரபாகரன் எப்படியிருக்கிறார்? என்று கேட்டார். பிரபாகரன் தலைமையில் தனித்தமிழீழம் உருவாக என்னாலான உதவிகளை செய்வேன் என்று கூறினார்.

இதற்குள் ஏதேதோ தமிழ்நாட்டில் நடந்துவிட்டது. இதன் காரணமாக அந்த முயற்சி தொடரவில்லை. அந்த முயற்சி தொடர்ந்திருந்தால் ராஜீவ்காந்தியே தனித்தமிழீழத்தை பெற்றுத் தந்திருப்பார் இவ்வாறு மு.கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# பொன்சேகா விடுதலை...

பத்திரிகையின் செய்தியாளரிடம் தெரிவித்திருந்த நிலையிலேயே இச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இதன்போது வெளிநாடு சென்றுள்ள டிரான் அலஸ் நாடு திரும்பியதும் சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

சரத் பொன்சேகாவின் விடுதலை தொடர்பாக டிரான் அலஸ், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்திவந்தமை தெரிந்ததே.

அதேவேளை, அமெரிக்கா ராஜாங்க அமைச்சர் ஹில்லரி கிளின்டனை எதிர்வரும் 18ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் சந்திப்பதற்கு முன்னதாக சரத் பொன்சேகா விடுதலை செய்யப்படலாம் என செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.

(8451)

4 ரெக்டர் - 23000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

MAHESHWARY FOUNDATION

மணல் விநியோகம் சம்பந்தமான அறிவுறுத்தல்

கடந்த 09.05.2012 அமைச்சரவை முடிவின் பிரகாரம் மணல் பெறும் பயனாளிகளின் வசதியினைக் கருத்தில் கொண்டு மணல் விநியோகம் இலகுவாக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் மணல் அகழ்வு உத்தரவுப் பத்திரம் (Mining License) உடையவர்கள் மட்டும் தமக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்து பயனாளி கோரும் மணலின் அளவினை பிரதேச செயலாளர் அனுமதி மற்றும் உறுதிப் பத்திரங்களை கோராது மணலினை வழங்க முடியும்.

எனவே மணல் தேவைப்படுவோர் கிராம சேவையாளர், பிரதேச செயலாளர்களின் அனுமதிக்கு விண்ணப்பிக்காமல் நேரடியாக மகேஸ்வரி நிதியத்தில் தேவைப்படும் மணலின் அளவினை பதிவு செய்வதன் ஊடாக உடனடியாக பெற்றுக் கொள்ளமுடியும்.

த.றஜீவ்
செயற்திட்ட இணைப்பாளர், மகேஸ்வரி நிதியம்.

(C-018)

காணி, வீடு விற்பனைக்கு

சண்டிலிப்பாய்
சம்பிலிவோடையில்
2 1/4 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
0770296574

(8464)

உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கும் D.M.I. சர்வதேச Companyக்கு Supervisor, A.S.M. Manager, Administration, Customer care இவ்வாறான பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. தாங்களும் தகைமை இருப்பின் தொடர்பு கொள்ளவும்.

- 20 பேர் மட்டும் தேவை
- 6 மாதகாலப் பயிற்சி
- தங்குமிட வசதி இலவசம்
- 12000 - 15000 பெறமுடியும்

Contact: 021 7200867 (9 am - 5 pm)

(8465)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.